# அடியார் பெருமை

தி. சு. அவினாசிலிங்கம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்
கோயமுத்தூர் - 641020

# அடியார் பெருமை

தி. சு. அவிநாசிலிங்கம்

ADU LIB
74824

AVINASHILINGAM INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION FOR WOMEN CBE.
(DEEMED UNIVERSITY)
74824
LIBRARY

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்
கோயமுத்தூர்-641020

முதற் பதிப்பு : ஜூலை 1975

விலை ரூ. 3-00

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய பிரஸ்
கோயமுத்தூர்-641020

# முன்னுரை

இதில் வரும் கட்டுரைகள் பெரும்பாலும் சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தார் பிரசுரம் செய்யும் 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயத்'தில் வந்தவை. அவை பல ஆண்டுகளுக்கு முன் அவ்வப்போது வெளியானவை. எழுதப்பெற்ற பெரியார்கள் வெவ்வேறு சமயங்களைச் சார்ந்தவர்கள்; வெவ்வேறு காலத்தவர்கள்.

கடைசிக் கட்டுரை ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பிரதம சீடர்களில் ஒருவரான ஸ்ரீமத் சிவானந்த சுவாமிகளைப் பற்றியது. மற்ற கட்டுரைகளுக்கும் இதற்கும் பெரியதொரு வித்தியாசம் உண்டு. மற்றவை புத்தகத்தில் படித்து எழுதப் பெற்றவை. இந்தக் கட்டுரை நேர் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது.

இக்கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடுவது பயனுள்ளதாக இருக்குமென்று, அதை வெளியிட உதவ ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயக் கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. சொ. அரியநாயகம் பேரன்புடன் முன்வந்தார். அவருக்கும், இக்கட்டுரை வெளியிட அனுமதித்த ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தாருக்கும் என் உளங்கனிந்த நன்றி உரித்தாயது.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன்
வித்யாலயம்
14—8—1975

தி. சு. அவினாசிலிங்கம்

INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION FOR WOMEN (DEEMED UNIVERSITY) AVINASHILINGAM CBE.
74824
LIBRARY
Δ2y7 LS

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | துளசி தாசர் | ... | 1 |
| 2. | ஸ்ரீ சைதன்ய தேவர் | ... | 6 |
| 3. | பிரான்சிஸ் அடிகள் | ... | 18 |
| 4. | முகமது நபி | ... | 25 |
| 5. | ரபேயா | ... | 31 |
| 6. | பயாசித் பந்தாமி | ... | 37 |
| 7. | பூதயால் அடிகள் | ... | 41 |
| 8. | இப்ரஹீம் பென் ஆடம் | ... | 45 |
| 9. | சுவாமி சிவானந்தா | ... | 51 |

# துளசிதாசர்

ராம்போலோ சில நாட்கள் வெளியே சென்றிருந்து தம் இல்லத்திற்குத் திரும்பி வந்தார். தன் மனைவி ஒரு மகவைப் பெற்றிருக்கிற செய்தி வழியில் அவருக்குத் தெரிந்தது. எனவே, மனைவியையும் மகவையும் பார்க்க ஓடோடியும் வந்தார்; வீட்டை அடைந்தார்; அப்பொழுதுதான் தன் மனைவி அவர் பிறந்த அகத்துக்குச் சென்றுவிட்டதாகத் தெரியவந்தது, மனைவியின் பிரிவாற்றுமையை அவரால் பொறுக்க முடியவில்லை. வாழ்க்கைத் துணைவியாக விளங்கியவளை விட்டுப் பிரிந்திருப்பது. அவருக்கு இயலாத ஒன்று. ஆதலால் அப்பொழுதே தம் மனைவியின் வீடு நோக்கிப் புறப்பட்டார். மாலை நேரம், இருள் சூழ்ந்தது. எனினும், அவர் மனத்தை மாற்ற முடியவில்லை. வழியில் ஒரு நதி. மழையின் மிகுதியால் இருகரைகளும் புரள வெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது. சூரிய வெளிச்சத்திலும்கூட அந் நீரோட்டத்தைக் கடந்துசெல்ல மாந்தர் அஞ்சுவர். ஆனல், ராம்போலாவுக்கோ இவையெல்லாம் கவனிக்கப் போதுமான நேரமில்லை. மனைவியைப் பார்க்க வேண்டுமென்ற ஒரே எண்ணம்தான் அவர் மனத்தில் குடிகொண்டிருந்தது. வழியில் வரும் வசதியின்மைகளும், இடையூறுகளும், அபாயங்களும் அவர் கண்ணுக்கும் கருத்துக்கும் தோற்றவில்லை. அவற்றைப் பொருட்படுத்தவுமில்லை. மனைவியைக் காணும் ஆசையில் அவர் நிலைத்திருந்தபடியால், மற்ற எதையும் கவனியாது; பயங்கரமான அவ்வெள்ளத்தையும் நள்ளிரவில் கடந்து சென்று தன் மனைவியை அடைந்தார்.

அன்புடன் தன் மனைவியை அணைத்து அவள் உடல்நலம் விசாரித்தார். தம் இல்லம் திரும்பியபொழுது அவள் இல்லாததால் மிகத்

துன்புற்று, இருளையும் மற்ற இடையூறுகளையும் கவனியாமலும் ஆற்று வெள்ளத்தைக் கடந்தும் ஓடோடியும் வந்ததைப் பற்றி அவளிடம் சொன்னார். அவற்றை அன்புடனும் வருத்தத்துடனும் செவியுற்றார் ராம்போலாவின் மனைவி. இத்துணை அபாயங்களுக்குத் தம் கணவர் ஆளாகிக் கொள்ளாமல் இருக்கும் பொருட்டு அவரை விளையாட்டாக இவ்வண்ணம் கண்டிக்க முயன்றாள். "நாதா! புழுக்கூடாகிய இவ் வுடம்பினிடத்துத் தாங்கள் வைத்திருக்கும் அன்பை பகவானாகிய ஸ்ரீ ராமபிரான் திருவடிகளில் செலுத்தினால், எத்துணை மகத்தான பெருமையை அடைவீர்கள்!" என்றாள்.

இவ்வார்த்தைகள் ராம்போலாவின் மனத்தில் ஆழமாகத் தைத்தன. அச்சொற்கள் தெரிவித்த உட்பொருள் அவர் தூய உள்ளத்தில் திடீரென ஓர் ஒளியை உண்டாக்கியது. "என்னே! என்னே! சின்னாட்களில் அழியுந் தன்மையான எலும்புக் கூட்டை உண்மையென நினைத்து அதன்பால் இத்துணை மோகங் கொண்டிருந்தேனே! நான் மிகுதியும் நேசித்து வந்த இம்மெய், பொய்யன்றோ? இம்மெய்யால் வரும் இன்பமும் அத்துணையதன்றோ? இத்துணை நாட்கள் இதனை அறியாம லிருந்தது எவ்வளவு அறியாமை" எனத் தம்மைத் தாமே கடிந்து கொண்டார். உண்டுண்டுழன்று உயிர் துறப்பதே சாதாரண மாந்தர் நிலையென்று அவர் தெள்ளிதின் கண்டார். உடல் பொய்யுறவெனவும் அது நாள்தோறும் மாறி மறையும் தன்மைத்தென்றும், தண்ணருளே மெய்யுறவெனவும் உணர்ந்தார். ஸ்ரீ ராமபிரான் திருவருளே யாவரும் போற்றற்குரிய செல்வமென அவர்க்கு ஒரு நொடிப்பொழுதில் தோன்றிற்று. அத்திருவருளால் பெருகும் 'பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய், ஏகவுருவாய்க் கிடக்குதையோ. இன்புற்றிட நாமினி எடுத்த தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும்' என்று தம்மைக் கூப்பிடுவது போல் அவருக்குத் தோற்றியது. எனவே, அவரது முழுமனமும் ஸ்ரீ ராமபிரான் பாதார விந்தங்களில் சென்று நின்றது. இவ்வுலக இன்பத்தை விடுத்துத் துறவு பூணுவதே தமக்குரிய நெறியென உறுதி பூண்டார். உடனே தன் மாமன் வீட்டை விட்டு வெளிப் போந்தார்; பொன்னையும் பெண்ணையும் விடுத்து, ஊரையும் ஊனையும் வெறுத்து, ராமதாசனாகி, காசிக்கு ஏகினார்!

இராமபக்திக்கும் இராமபக்தர்களுக்கும் பெயர் பெற்ற நகரம் காசி. அன்றும் இன்றும் என்றும் தாரக நாம பஜனையில் அவ்வூர் தலையாயது. அப்பதி பெருஞ் சிவத் தலம் எனினும், அங்கு பக்தர்கள்

பஜனை செய்வது தசரத ராமனுடைய தெய்வீக நாமமே. வீடுகள் தோறும் சத்திரங்கள் தோறும் பக்தர் குழாங்கள் கூடிக்கொண்டு பக்தியுடனும் சிரத்தையுடனும் இராமாயணத்தை வாசித்துக் கண்ணீர் மல்கிப் பரவசமடைவதை இன்றும் காணலாம். காசியம்பதியில் எழுந்தருளியுள்ள காசி விசுவநாதர் கூட இராமதாரகத்தையே உச்சரிப்பதாகப் புராண-இதிகாசங்கள் கூறுகின்றன. வாரணசியில் உடலை உருக்கும் ஒவ்வொருவனுடைய செவியிலும் அவனுடலைத் தீயிலிடுமுன், மந்திரங்கள் யாவற்றிலும் மணியாக விளங்கும் இராம தாரகத்தையே சிவபெருமான் ஓதுவதாகக் காவியங்களும் பெரியோர்களுடைய அனுபவங்களும் கூறுகின்றன. ஆதலால் ஸ்ரீ ராமபிரானைப் பஜிக்கவும் துதிக்கவும், அவர் திருவருளைப் பெறவும், காசியம்பதியைத் தவிர சிறந்த தலம் வேறொன்றுமில்லை. எனவே, தீவிரமான மனத்துடன் ராம்போலாவும் காசியை அடைந்தார். அன்றுமுதல் அவர் துளசிதாசர் ஆயினர்!

அப்புனிதத் தலத்தில் பல வருடங்கள் துளசிதாசர் இருந்து பகவத் கிருபையை நாடித் தவம் செய்து கொண்டிருந்தார். ஸ்ரீராம தாசனுகிய ஸ்ரீ ஆஞ்சநேயரே அவருக்குக் குருவாக வாய்ந்ததாக வரலாறு கூறுகின்றது. அவர் ஆஞ்சநேயரைக் குருவாக ஏற்ற வரலாறு பற்றிக் கதைகள் பல இருக்கின்றன. ஒரு நாள் ஒரு வில்வ மரத்தில் ஏறி அதன் இலைகளை ஒவ்வொன்றுக எடுத்து, அம்மரத்தின்கீழ் லிங்கவடிவாய் விளங்காநின்ற சிவபெருமானுக்குப் பூசனை செய்தார் துளசிதாசர். இப்பூசையின் மகிமையால் அம்மரத்தில் அதுகாறும் வதிந்திருந்த பேய் ஒன்று தன் பேய்ப்பிறவி நீங்கி விடுதலைப் பெற்றது அதனுல் அவ்வாத்மா பேரானந்தங்கொண்டு தன் விடுதலைக்குக் காரணமாயிருந்த துளசிதாசரை நோக்கி, "அய்யா! நீவிர் என்னைப் பேய்ப்பிறவியினின்றும் மீளச் செய்தீர். யான் உமக்கு என்னுலியன்ற உதவியைச் செய்யக் கடமைப்பட்டுள்ளேன். ஏதாவது கேட்டருளும்" எனப் பணிவுடன் இறைஞ்சியது. அதற்கு,எந்நாளும் இராமபிரானுடைய திருவடிகளையே நாடியிருந்த துளசிதாசர் "ஸ்ரீதசரத புத்திரனுடைய பாதாரவிந்தங்களை யடையும் வழியை நீ அறிவாயேல், எனக்கு உதவுக. அதைத் தவிர நான் பிறிதொன்றும் வேண்டிலேன்" எனக் கேட்டுக் கொண்டார். அதற்கு அந்த ஆவி "ஸ்ரீ அயோத்தியா நாதன் திருவடிக் கமலங்களைப் பெறும்படி அருள என்னுல் இயலாது; எனினும் அப்பேறு பெறுதற்கு வேண்டிய உபாயங்களை யான் உமக்குத் தெரிவிக்கிறேன்; கவனித்துக் கேட்பீராக. கேதார நாதர் கோயிலுக்கருகில் அனுதினமும் ஸ்ரீ ராம சரித்திரம் வாசிக்கப்பட்டு பல பக்தர்கள் சிரத்தையுடன் கூடிக் கேட்

கின்றனர். அவர்களில் முதன் முதலில் வந்து சரித்திரம் முழுதும் அன்புடன் கேட்டு கடைசியில் போவார் ஒருவர். அவர் வயோதிகர்! அவர் திரும்பிச் செல்லும் சமயம் அவரை விடாமல் தொடர்ந்து, அவர் பாதத்தில் சரண்புகுந்தால் நீர் வேண்டிய காரியம் எளிதில் கைகூடும். ஏனெனில் அவரே ஆஞ்சநேயப் பெருமான்! அவர் அருள் பெற்றால் ஸ்ரீ சீதாபதியின் அருள் பெறுவது அடியார்க்கு மிக எளிது'' என்று சொல்லி மறைந்தது.

துளசிதாசர் இதனைக் கேட்டார், ஆனந்த பரவசராயினர். ஸ்ரீ ராமபிரான் திருவருள் பெறும் காலம் நெருங்கியதென மகிழ்ந்தார். ஸ்ரீ ராமபிரான் அருள் கிடைத்தால் தன்னைப் போல் பேறு பெற்றவர் எவருமிலர் என இறுமாந்தார். அன்றுமுதல் அவ்வண்ணமே கேதார நாதர் கோயிலுக்கருகில் நடக்கும் இராமாயணப் பிரசங்கத்துக்கு அனுதினமும் தவறாமல் செல்லத் தொடங்கினர். ஒவ்வொரு நாளும் முதலில் வந்து கடைசியில்போவார் எவரென ஊக்கத்துடன் உற்றுக் கவனித்து வந்தார். வைணவக் குறிகளுடன் ஒரு வயோதிகர் மட்டும் யாவர்க்கும் முன்வந்து ஒரு மூலையில் அமைதியுடன் வீற்றிருந்து கூட்டம் கலைந்த பிறகு செல்வதைப் பல நாட்கள் கண்டுகொண்டார். ஒருநாள் அவ் வயோதிகரைப் பின் தொடர்ந்து அவர் பாதங்களில் விழுந்து, ''பிரபோ! நீவிர் ஆஞ்சநேயப் பெருமானென நன்றாய் அறிவேன். ஸ்ரீ ராமதாரக மந்திரத்தை எனக்கு உபதேசித்தருள்வீராக'' என்று பக்தியுடனும் சிரத்தையுடனும் இரந்தார். ஸ்ரீ ராமதாசனும் அவ்வண்ணமே அருளி மறைந்தார்!

ஆஞ்சநேயரின் அருளைப் பெற்ற அவர் ஒரு தனியிடத்தில் தனித்துத் தவமிருந்து பல வருடங்கள் தாரக மந்திரத்தையே ஓதி உணர்ந்தார். ஸ்ரீ ராம தரிசனமும் அவர் திருவருட் பிரசாதமும் கிடைக்கப் பெற்றார். துளசிதாசர் ஆஞ்சநேயரைச் சந்தித்த இடமும் அவர் சாதனை செய்த தலமும் இன்றும் காசியில் காண்பிக்கப்படுகின்றன.

சாதனை செய்து அருள்பெற்ற பின்னர் பல புண்ணிய தலங்களுக்குச் சென்று ஆராதித்தார் பிருந்தாவனம், மதுரா, அயோத்தியா முதலிய தீர்த்தங்களுக்குச் சென்று ஆங்காங்கு விளங்கும் மூர்த்திகளைத் தரிசனம் செய்து வந்தார். சென்ற இடமெல்லாம் பகவானை வாயார வாழ்த்திச் இசையுடன் கீர்த்தனைகள் பல பாடுவார். அவர் பாடிய பாக்கள் அவர் உருகிய உள்ளத்தினின்றும் கசிந்து வந்தனவாதலால், யாவர் மனத்தையும் கவர்ந்தன. அதைக்கேட்டோர் யாவரும் தூய்மையடைந்து பக்தியில் மூழ்கினர் பண்டிதர்மொழியில் பாடாமல், யாவர்க்கும்

பாமரர்க்கும் எளிதில் விளங்கும் இந்தியில் தம் பாக்களை அவர் பாடி வந்தார். அவர் மறைந்து பல நூற்றுண்டுகளாய் விட்டன. இக் காலத்திலும் அவர் பாடிய இந்திப் பாடல்கள் நாடு முழுமையும் பரவி யிருக்கின்றன. அவர் நெஞ்சுருகிப் பாடின பாக்களைப் பாடாத வீடுகளே இந்தி வழங்கும் மாநிலம் முழுவதிலும் காண்பது அரிது. ஆனல் இவருடைய பெயரும் கீர்த்தியும் இப்பாக்களால் மட்டும் உண்டானவை யல்ல. தம் ஆயுள் முழுமையும் பஜனை செய்து வந்த ஸ்ரீ ராமபிரானின் திவ்விய வரலாற்றை, யாவரும் உணரும்படியான எளிய நடையில் இந்தியில் தமது அற்புத பக்தியால் அன்பொழுக, யாவரும் எளிதில் அவ்வானந்தத்தை உண்டு உணரும்படி, இயற்றியருளினர். அவர் கீர்த்திக்கு இதுவே முதல் காரணம். வடஇந்தியாவில் எல்லா நகரங்களிலும் பக்தர் குழாங்கள் துளசிதாசர் அருளிச் செய்த இராமா யணத்தைப் படித்துப் பயன் பெறுவதை இன்றும் காணலாம். நாமும் படித்தால் பயன் பெறலாம்!

# ஸ்ரீ சைதன்ய தேவர்

ஸ்ரீ சைதன்ய தேவர் கி. பி பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றி, அன்றுமுதல் இன்றுவரை வங்காள தேசத்துக்கே ஒரு பேரொளியாய் விளங்கி வருகிறார்; வங்காள தேசத்தை உண்டாக்கிய பெருஞ் சக்திகளில் இவரொருவர்; பகவத் பக்தியின் சக்தியை மறந்து, கேவலம் சாத்திர வாதத்திலேயே ஈடுபட்டு, உண்மைத் தெய்வ உணர்ச்சியே இல்லாத அக்காலத்தில், இவர் சாத்திரப் பயிற்சிக்குப் பிரதானமாய் விளங்கிய நவத்வீபத்தில் தோன்றினார்; சாத்திரக் கல்வியில் எவரும் நிகரில்லாதபடி பயின்று, அதன் பயனின்மையைக் கண்டு அதை விடுத்தார், பக்தியின் பெருமையை உணர்ந்து அதில் மூழ்கினார், ஈசுவர உணர்ச்சியின்றித் துடித்துக் கொண்டிருக்கும் மாந்தர்க்கு வழி காட்டினார்.

வங்க நாட்டின் நவத்வீபம் என்னும் நகரில் கி பி. 1486ஆம் ஆண்டு அந்தணர் குலத்தில் அவர் பிறந்தார். அவர் தந்தை விஸ்வம்பரர் பகவத் பக்தியில் சிறப்பான ஈடுபாடுடையவர்; அன்னையின் பெயர் சசிதேவி. இருவரும் பல நோன்புகள் நோற்று இவ்வருமைப் புதல்வரைப் பெற்றெடுத்தனர். அப்பாலகனின் பேரழகு பற்றி அவனுக்குக் கௌரங்கன் (அழகிய அங்கமுடையவன்) என்னும் பெயர் கொடுக்கப்பெற்றது. இவர் தோன்றுவதற்குமுன் பெற்றோர்க்குப் பல குழந்தைகள் தோன்றி இறந்தார்களாதலின் இவருக்கும் “நிமாம்” (அற்ப வயதுள்ளவன்) என்னும் பெயரும் வழங்கி வந்தது. வயது ஏற ஏற புத்தி நுட்பத்திலும், வாக்குச் சாதுரியத்திலும், பேரழகிலும், முதிர்ந்து வந்தார்; யாவரும் வியக்கத்தக்க திறம் வாய்ந்தவராய்க்

காணப்பட்டார்; இளம் வயதிலேயே பள்ளிக்கு அனுப்பப்பட்டு கற்க வேண்டியவற்றைக் கற்ருர்; பதினைந்தாம் வயதில் - கற்ருேர் மலிந்த அந்நகரிலேயே - ஒரு பெரும் மேதையாக விளங்கினுர்; திருமணமும் சிறு வயதிலேயே நடந்தேறியது.

சரஸ்வதிதேவியின் அருள்பெற்றவராய் விளங்கின அவர், சின்ஞட்களில் திக்விஜயம் செய்யப் புறப்பட்டார். சுபார் நகரம், விடாடியா முதலிய சாத்திரக் கல்வியில் பெயர்பெற்ற கீழ்வங்காளத்திலுள்ள ஊர்கள் தோறும் சென்று, ஒவ்வோரிடத்திலும் தம் சித்தாந்தத்தையும், கல்வித்திறனையும் நிலைநாட்டினுர். ஆனுல், அவர் அச்சமயம் ஒரு பெருஞ்சாத்திரவாதியாய் விளங்கினுரேயொழிய பகவத் பக்தியுடைய வராய் இல்லை. வைணவ பக்தர்களுக்கிடையே தோன்றியிருந்த போதிலும் அப்பொழுது அவருள்ளம் பக்தியில் ஈடுபடவில்லை. தம்மைப் பக்தி மார்க்கத்தில் ஈடுபடும்படி வற்புறுத்துவோரையும் ஏளனம் செய்து அனுப்பி விடுவார்.

செல்லும் இடந்தோறும் பெரும் புகழ்பெற்று, அரியதிறம் உடையவ ரென யாவராலும் போற்றப்பெற்று விளங்கினுர். அச்சிறுவயதில் அவர் அத்துணைக் கல்வித் திறனையுடைத்தாயிருந்ததைக் கண்டு பலர் மிக ஆச்சரியப்பட்டனர். இங்ஙனம் கீர்த்தியுடனும், வெற்றியுடனும் அவர் தம் இல்லம் திரும்பிய பொழுது, தாயின் அழுகையொலி கேட்டார். உட்சென்று பார்க்குங்கால், தம் அன்புடைய மனையாட்டி, பாம்பு தீண்டப்பெற்று மாண்டிருப்பதைக் கண்ணுற்ருர். தம் இல்லக் கிழத்தியை அங்ஙனம் திடீரென்று இழந்தது அவர் மனத்தில் பெரும் துயரத்தை விளைவித்ததெனினும், அதை வெளிக்காட்டாது அடக்கிக் கொண்டு, ஆறுதல் வார்த்தைகள் சொல்லித் தாயைத் தேற்றினுர். இத்துயரத்தைத் தீரத்துடன் பொறுத்துக் கொண்டாராயினும், அது அவருள்ளத்தில் ஒரு பேருணர்ச்சியை உண்டாக்கியது. இந்நிகழ்ச்சி இவ்வுலகின் நிலையாத் தன்மையை ஐயந்திரிபற உணர்த்திற்று. 'இவ்வுடம்பு நீர்மேற் குமிழி'யெனவும், 'தாய் தந்தை மனைவி முதலியோர் யாவரும் சந்தையின் கூட்ட'மெனவும், 'இவ்வுலகம் யாவும் கணநேரத்திலே தோன்றி மறைவன' எனவும் செவ்வனே தெளிந்தார். மனம் ஆறுதலடைய கயா என்னும் தலத்திற்குச் செல்லத் தீர்மானம் செய்தார். மறுபடியும் மணம் செய்து கொள்ளக் கொஞ்சமேனும் விருப்பமில்லாதிருப்பினும், தன்தாயின் வேண்டுகோளுக்கிணங்கி, விஷ்ணுப்பிரியா என்னும் மாதை மணம் புரிந்தார்; மணம் முடிந்த சின்ஞட்களுக்குப் பிறகு தாம் முன் எண்ணியிருந்தபடி கயாவுக்குச் சென்ருர்.

கயா ஒரு புண்ணியத் தலமாதலால், அங்கு ஏராளமான பக்தர்கள் பகவானுக்குச் சேவை செய்து கொண்டிருந்தனர். எங்கும் வேதம் முழங்கிக் கொண்டிருந்தது. அருள் பெற்ற சாதுக்கள் பலர் அங்குக் காணப்பட்டனர். இவ்வுலகின் நிலையாத் தன்மையை உணர்ந்திருந்த கௌரங்கருக்கு அப்பொழுது பகவத் பக்தியின் மகிமையும், பகவத் கிருபையின் பெருமையும் தெள்ளிதில் விளங்கின. முன்பு, தாம் பக்தர்களையும் பக்தியையும், ஏளனம் செய்து பேசியிருந்ததை எண்ணி வருத்த முற்றார்; தம் கல்வியின் பயனற்ற தன்மையையுணர்ந்தார். 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்; கற்றும் அறிவில்லாத என் கர்மத்தை யென் சொல்வேன்; மதியை என் சொல்வேன் ....... வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த வித்தையென் முத்தி தருமோ ?' எனக்கதறுவார்; அச்சமயம் அருளமிர்தம் பெற்று சாந்தகுணசீலராய் விளங்கின ஈசுவரபுரி என்னும் சாதுவைக் கண்ணுற்றார்; தன்னையும் மறந்து அவரை அணுகி அவர் பாதத்தில் வீழ்ந்து வணங்கினார். தமக்குத் தீட்சை கொடுத்தருள வேண்டுமென வேண்டினார். அச்சாதுவும் இவர் நிலையையுணர்ந்து தீட்சை கொடுத்தருளினார்! கௌரங்கர் அன்று முதல் தம் கல்வித் திறனை மறந்து, தம் வித்வ மதத்தை அறவே விடுத்து, இரவும் பகலும் ஈசுவரனையே நாடியவரானார். தம் ஊருக்குத் திரும்பாமல் கயாவிலேயே தம் வாழ்நாள் முழுவதும் கழித்துவிட நினைத்தார். ஆனால், அவருடன் வந்தவர்கள், பலவாறான காரணங்களைச் சொல்லி மிகச் சிரமத்துடன் அவரை நவத்வீபத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அவருடைய நிலைமையைக் கண்டு பலர் வியப்புற்றனர். சிலர் வருத்தப்பட்டனர்; இன்னுஞ் சிலர் அவருக்குப் பயித்தியம் பிடித்து விட்டதென நினைத்து வருந்தினர். அவர் தாயும், சுற்றத்தாரும் அவரைப் பயித்தியத்தினின்றும் தெளிவிக்கப் பலவிதத் தந்திரங்களைத் தேடினார்கள். கௌரங்கரின் பயித்தியம் தெய்வீக பயித்தியம். அதன் உண்மையை இவர்கள் அறிய இல்லை. எனவே, இவர்கள் முயற்சிகள் யாவும் பயன்படாது போயின. கௌரங்கரோ, பிறர் தம்மைப்பற்றி என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று எண்ணவும் நேரமில்லாதவராய் பக்தியில் பரவசப் பட்டிருந்தார். தம் மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதிலும் மனத்தைச் செலுத்தமாட்டாதவராய், பல பக்தர்களுடன் சேர்ந்து கொண்டு ஸ்ரீனிவாசன் எனினும் ஒரு பக்தர் வீட்டு முற்றத்தில் எப்போதும் ஈசுவரனைப் பாடுவதிலேயே காலத்தைக் கழித்தார். பஜனை மாலை நேரத்தில் தொடங்கினால் மறுநாள் காலைவரை இடைவிடாது நடக்கும். கௌரங்கதேவரே இவை யாவற்றிற்கும் உயிராக விளங்கினார்.

"ஹரி நமோ! கிருஷ்ண யாதவாய நமோ!
யாதவாய மாதவாய கேசவாய நமோ!"

இவை போன்ற பகவத்நாமங்களைச் சொல்லிக்கொண்டு பஜனை தொடங்கும். இப்படிச் சொல்லிக்கொண்டே கௌரங்கதேவர் பகவத் பக்தியில் ஈடுபட்டுத் தம்மை மறந்திடுவார்; ஸ்ரீ கிருஷ்ணபிரானின் பிரிவாற்றாமையைப் பொறுக்கமாட்டாமல் கதறுவார். 'அரும் பொன்னே மணியே என் அன்பே, என் அன்பான அறிவே, என் அறி விலூறும் ஆனந்த வெள்ளமே' என்றென்று பாடுவார்; ஆடுவார் ஆடி; நாடி விரும்பியே கூவுவார்; அலறுவார்; விண்மாரியென அவர் கண் மாரி பெய்ய வேசற்றயருவார்; 'என்பெலாம் நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்ப உடலிளக மனது அனலின் மெழுகாய் இடையருதுருக வரு மழை போலிரங்கியே விழிகள் நீரிரைப்ப, அன்பினுல் மூர்ச்சித்துப் பல காலும் கீழே விழுவார்; எஞ்ஞான்றும்' ஹரி போல், ஹரி போல்' (ஹரி நாமத்தைக் கூறு) என்று சொல்லிக் கொண்டும், கையை உயர்த்தி நடனம் செய்து கொண்டும், ஸ்ரீ கிருஷ்ணபிரான்பால் தம் முழு மனத்தையும் செலுத்தியவராய் ஆனந்த பரவசத்தில் மூழ்கிக்கிடப்பார்.

நாள்தோறும் பகவத்அன்பில் கௌரங்கர் ஆழ்ந்திருப்பது கண்ணுற்ற யாவருள்ளத்திலும் என்றும் மறக்க முடியாத ஒரு பேருணர்ச்சியை உண்டாக்கியது. இவருடைய சிவந்த மேனியும் பரந்த கண்களும், பவள வாயும், ஒளிமுகமும் உயர்ந்த கல்வியும், எல்லாம் மறந்து திருவருள் பெற்று நடனம் செய்வதும் அவர்கள் மனத்தைக் கவர்ந்தன. அவரைப் பார்த்தவர்களில் பலர், அவரைக் கண்கண்ட தெய்வமெனப் போற்றினர். பலர் அவரால் கவரப் பெற்றுத் தாமும் அப்பஜனைக்குள் நுழைந்தனர். அங்ஙனமே அவருடைய பிரதம சீடர்களால் விளங்கியிருந்த அத்வைதாச்சாரியார், நித்தியாநந்தர், ஹரிதாசர் முதலியோர் அவரிடம் வந்து சேர்ந்தனர். பஜனைகளின் கூட்டம் நாளாக நாளாக மிகப்பெருகிற்று. ஸ்ரீனிவாசர் வீட்டு முற்றம் அத்துணைப் பேர்களுக்கும் போதுமான இடம் கொடுக் காமல் போகவே, வெளித்தெருக்களில் இப்பஜனைகளை வைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

கௌரங்கரைப் பலர் போற்றினர், அவருக்கு விரோதிகளும் சிலர் இருந்தனர். அவரைப் பயித்தியக்காரனெனவும், வீண் சத்தம் செய்து தம் உறக்கத்தைக் கெடுப்பவனெனவும் நினைத்து, அவர்பால் கோபம் கொண்டனர். அக்கோபத்தை அவர் அணுவேனும் கவனிக் காமலிருக்கவே, அவர்கள் கோபம் வெறுப்பாக மாறியது; எவ்விதத்

திலாவது அவருடைய பஜனையைத் தடை செய்து நிறுத்த வேண்டு மென முடிவு செய்தார்கள். அச்சமயம் அவ்வூரை ஆண்டு கொண் டிருந்த இராஜப் பிரதிநிதி (காஜி) ஒரு முகமதியர். இப்பஜனைகளையும் அதனால் விளையும் இரவுக் கூச்சல்களையும் நிறுத்தும்படி அவர்பால் சென்று முறையிட்டனர். எனவே, தெருக்களில் பஜனைகள் பாடக் கூடாதென உத்தரவிடப்பட்டது. கௌரங்கர் அதைக் கொஞ்சமேனும் பொருட்படுத்தாமல் தம் பக்தர்கள் சூழ, பஜனை செய்துகொண்டு புறப் பட்டார். இவரைப் பார்க்கும் பொருட்டு மக்கள் திரள்திரளாக வந்து குவிந்தனர். பஜனை ஒலி ஊரெங்கும் முழங்கியது. பஜனைக் குழுவினர் அக்காஜியின் வீட்டினெதிரே சென்றனர். காஜியும் தம் கோபத்தை யெல்லாம் விட்டு பக்தி வலையில் அகப்பட்டார். கௌரங்கர் பக்தியைக் கண்டு வியந்து அவரைப் பலவாறு போற்றினர்.

நாள் தோறும் கௌரங்கருடைய பக்தியும் அதிகரித்துக்கொண்டு வந்தது. ஸ்ரீ கண்ணபிரானை நினைப்பதிலும் பேசுவதிலும், அந்நினைவில் தம்மை மறந்திடுவதிலுமே காலத்தைக் கழித்து வந்தார். உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் அவருக்கு ஸ்ரீ கிருஷ்ணபிரானைப் பற்றியே நினைவூட்டின. பறவைகளின் ஒலியையும் அன்று மலர்ந்த மலர்களையும் காணுந்தோறும் பிருந்தாவனத்தைப் பற்றிய நினைவு தோன்றி ஸ்ரீ பிருந்தாவனக் கோபிநாதனைப் பற்றியே நினைப்பார். நீலமேகத்தையும், ஆகாயத்தையும் காணுந்தோறும் அச்சியாமள வண்ணனை நினைந்து நைந்துருகிப் பாடுவார். மயில் இறகு களைக் காணுந்தோறும் கண்ணபிரானை நினைந்து பிரிவாற்றாமையால் வருந்துவார். பசுக்களைக் காணுந்தோறும் நந்த கோபாலனை நினைத்து அந்த நினைவில் தம்மையும் மறப்பார். இவ்வாறாக அவருள்ளத்தில் பக்திப் பெருஞ்சுடர் பற்றுதல்கள் யாவற்றையும் பொசுக்கியது. உலகியலை பற்றிக் கேட்பதுகூட அவருக்கு மிகத் துன்பமாக விருந்தது. ஆகவே, மனித வாழ்க்கைக்கு இலக்காக விளங்கா நின்ற துறவறம் கைக்கொள்ள முடிவு செய்தார். ஒருநாள் நள்ளிரவில் எவருக்குந் தெரியாமல் தம் வீட்டை விட்டு வெளியேறினர்.

கௌரங்கர் ஊரை விட்டு வெளியேறின செய்தி தெரிந்ததும் அந் நகர மாந்தர் யாவரும் துயரத்தில் ஆழ்ந்தனர்; என்றும் பிரகாசித்துக் கொண்டிருந்த சூரியனை அன்று இழந்தாற்போல், அந்நகரத்தார் யாவரும் ஒளி குன்றித் திகைத்திருந்தனர். அவர்தம் அன்னை ஆறாத்துயரத்துக்குள்ளானர். அவருடைய இல்லாள் ஊணும் உறக்க மும் இன்றி அளவிடற்கரிய துக்கத்தில் ஆழ்ந்தார். நித்தியானந்தர்,

ஸ்ரீனிவாசர் முதலிய பக்தர்கள் அவர் பிரிவாற்ருமையைப் பொறுக்க மாட்டாமல் கண்ணீர் விட்டுக் கதறினுர்கள். ஆனுல் இவை யெல்லாம் கௌரங்கரை தடுத்து நிறுத்தவல்லன அல்ல. அவர் கட்வா நகரத்துக் கேசவபாரதியிடம் விரைந்து சென்ருர். இவர் திருமேனியழகைக் கண்டு அந்நகரத்தார் யாவரும் சூழ்ந்து கொண்டனர். அவரது அழகான சிகைகளை வெட்ட மறுத்தான் நாவிதன். 'தன் அழகான சிகையையும் ஆபரணங்களையும் விடுத்து, காவியுடுத்து, இவர் சன்னியாசியாவதோ' வெனப் பலரும் திகைத் தனர். 'இவருக்குச் சன்னியாசம் கொடுக்கக்கூடாதெ'ன கேசவ பாரதியிடத்திலும் முறையிட்டனர். அவரும் அவர்கள் வார்த்தைக் கிணங்க கௌரங்கரை நோக்கி, "அப்பா! இவ்வளவு சிறு வயதில் உன் தாயும், மனைவியுமிருக்கும் போது ஏன் சன்னியாசம் கொள்ள விரும்புகிருய்?" எனக் கேட்டார். அதற்கு கௌரங்கர் "ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு. இயமன் என்றைக்கு வருவானே, அறியேன். அவன் நாளை வரினும் வரலாம்; நாற்பது வருடம் கழித்து வரினும் வரலாம். அதற்கு முன் நான் வாழ்க்கையின் இலக்கை அடைய வேண்டாமா?" என மறுமொழி சொன்னுர். அவருடைய பக்தியும், சிரத்தையும் அப்பெரியாருக்கு வியப்பைத் தந்தன, அதற்குமேல் யாதும் சொல்ல மாட்டாமல் துறவு ஒழுக்கத்தை உபதேசித்தருளினுர். அன்றுதான் 'கிருஷ்ண சைதான்யர்' ஆனுர் கௌரங்கர்.

அன்று முதல் அவர் நிலைமை முற்றிலும் மாறியது. பகவத் பிரேமையில் முற்றிலும் மூழ்கினுர். துறவியானதால் இரத்த பந்தங் களையும் விடுக்க எண்ணினுர்.

" திறம்பெறு நெஞ்சத் (து)அறம்பெறு துறவீ!
உறைவிடம் எதுவும் உனக்கென வேண்டாம்
நின்னைக் கொள்ளும் வீடெது? நேய!
விசும்பே கூரை. பசும்புல் படுக்கை
தற்செயலாகத் தான்கிடைப்பதுவே
உண்டியாகும். அவ்வுண்டி நன்ருக
அட்டிருப்பினும்,அது கெட்டிருப்பினும் எண்ணேல்."என்ற

துறவு நிலைக் கிணங்க, 'தம்மூர் செல்வதில்லை' என்றும், 'பரந்த உலகத்தில் எவ்விடமேனும் சென்று பிச்சை வாங்கி, ஸ்ரீ கிருஷ்ண பிரான் மகிமைகளில் ஈடுபட்டுக் காலத்தைக் கழிப்பதென்றும் நினைத்

தார். ஈசுவர பக்தியிலே முழுதும் ஈடுபட்டிருந்தபடியால் தாம் போகும் வழியையும் நன்ருக உணர்ந்தார் இல்லை. அவர் பக்தர்களும் இதுவே சமயமெனக் கருதி அவரை நவத்வீபத்திற் கருகிலுள்ள சாந்திபுரத்தில் அத்வைதாச்சாரியார் இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு நவத்வீபப் பக்தர்களும், அவர் தாயும் வந்திருந்தினர். சசிதேவி ஆருத் துயரில் மூழ்கினுர். சைதன்ய தேவர் அவர்களைப் பலவாருகத் தேற்றி விடைபெற்று, பூரி ஜகந்நாதம் சென்ருர்.

பூரிக்கருகில் செல்லச் செல்ல அருள் மிகுந்து தன் வசமிழந்து. தம் சீடர்கள் தம்மை அழைத்துச் செல்ல, அவர்கள் பின் சென்ருர் சைதன்யர். ஜகந்நாதர் கோயிற் கோபுரங் கண்டு பரவசமடைந்தார். கோவிலுக் கருகில் செல்லச் செல்ல, பேரன்பால் தூண்டப் பெற்று, தம்மை அடக்கிக் கொள்ள முடியாதவராய் ஓடிச் சென்று விக்கிரகத்தை அணைத்துக் கொள்ள முயன்ருர். இவர் இங்ஙனஞ் செய்வதை அந்நகரத் துப் பண்டிதர் ஒருவர் (வாசுதேவ சர்வபூஷணர்) கவனித்துக் கொண் டிருந்தார்; பிரபல பண்டிதரால் கல்வியுலகில் போற்றப் பெற்றிருந் தவர். சைதன்ய தேவர் அடிக்கடி ஹரிநாமங்களை உச்சரித்துக் கொண்டு கைகளை உயர்த்தி நடனம் செய்வதையும், அவரைச் சுற்றி பலர் நின்று பார்த்துக் கொண்டிருப்பதையும் கவனித்தார். ஏதோ அறிவில்லாமையால் அவர் அப்படிச் செய்வதாக நினைத்துப் இரக்கப் பட்டார். தம் உள்ளக்கிடக்கையை இவ்வாறு பலரறிய வெளியிடுவது அநாகரிகமெனவும், இளம்பிராயத்தில் சன்னியாசங் கொள்வது தவறு எனவும் அவருக்கு புத்திபுகட்ட நினைத்து அவரை நோக்கி, "அப்பா! நீயோ இன்னும் இருபத்து நான்கு ஆண்டும் நிறையாத இளைஞன்! இச்சிறு வயதிலே ஊணையும் ஊரையும் வெறுத்து, சிகையையும் பூணூலையும் விடுத்து துறவுபெற்றிருப்பது நன்றன்று; பலர் காணப் பாடுவதும், ஆடுவதும், பலர் கேலி செய்யவும் பழிக்கவும், இடம் தரும். ஆதலால் இவ்வேடங்களைக் களைந்தெறிந்து மற்றவர்களைப் போல் இருப்பதே மேல். என்னிடம் நீ சாத்திரங்களைக் கற்றுக் கொள்வாயா ஞல் இவற்றைத் தெளிவாக அறிவாய்'' என்ருர். சைதன்ய தேவரும் அவர் புகட்டும் நூல்களையும், அவற்றின் பொருளையும் வெகு பணிவுடன் கேட்டுக் கொண்டிருந்தார். கடைசியில் சைதன்யர் தமக்குச் சில ஐயங்கள் உண்டெனச் சொல்ல, இருவருக்கும் பெரும் வாதம் பிறந்தது சர்வபூஷணர் பாகவதத்திலுள்ள சில சுலோகங் களுக்கு ஒன்பது விதமான பொருள் சொல்ல, சைதன்ய தேவர் அச் சுலோகங்களுக்குப் பதினெட்டு விதமான பொருள் சொன்ஞர். தெய்வ அருள்பெற்று ஆவேசங்கொண்டு, அங்கு கூடியிருந்தவர்கள்

யாவரும் பிரமிக்க, வைணவ சித்தாந்தத்தைச் சரமாரியாய்ப் பொழிந்தார். அச்சமயம் அத்வைத பண்டிதரும் மற்றவர்களும் அவர் தெய்வத் தன்மையை உணர்ந்து அவர் திருவடிகளில் சரணு கதியடைந்தனர்.

ஆற்றலும் கல்வியும் வாய்ந்த பண்டித சிகாமணி சர்வபூஷணர் சைதன்ய தேவருடைய சீடரானுர்; இச்செய்தி முழுவதும் பரவிற்று. மற்ற பெரும் புலவர்களும் அவரை நாடிச் சென்றனர். அந்நாட்டு மன்னனும் அவரிருப்பிடஞ் சென்று அவரைப் போற்றி வணங்கினுர். அவருடைய மந்திரியாய்த் திகழ்ந்த ராமானந்தராயும் அவ்வண்ணமே அவரருள் பெற்ருர்.

சைதன்யர் திருமேனியின் எழிலும், இளம் பிராயமும் சிலர் மனத்தில் சந்தேகத்தை யுண்டு பண்ணின. அவர் வெளி வேடதாரியே யொழிய உண்மை பக்தரல்லரென்று அவர்கள் நினைத்தனர். மக்களை ஏமாற்றும் பொருட்டு இக்கோலங் கொண்டு திரிவதாக எண்ணி ஞர்கள். சிலர் அவரைச் சோதனை செய்யவும் முயன்றனர். தீரத்தராம் என்பவன் இவர்களில் ஒருவன். பெருஞ்செல்வம் படைத்தவன்; சிற்றின்பங்களில் மிகவும் ஈடுபட்டவன்; சைதன்ய தேவரைப் பரிசோதிக்கும் பொருட்டு இரண்டு அழகிய நாட்டியப் பெண்களை அவர்பால் ஏவினுன். அவர்களும் அவ்வெண்ணத்துடனே அவரிருக்குமிடஞ் சென்று தங்கள் சூழ்ச்சிகளைச் செய்தனர். எவ்வழி யாகிலும் தீய எண்ணங்களை அவர் மனத்திலூட்ட முயன்றனர். சைதன்ய தேவரோ ஸ்ரீ கிருஷ்ண பகவானைப் பற்றிய பாக்களைப் பாடிக் கொண்டு உடலுணர்வு சிறிதுமில்லாதவராய் தம் மனம் முழுவதும் பகவான்பாற் செல்ல வீற்றிருந்தார். அவ்வேசிகள் இருவரும் இது கண்டு வியந்து, வெருண்டு வருத்தமுற்று, அவர் பாதங்களில் விழுந்தனர். தீர்த்தராமும் இத்துணைப் பெரியாரைச் ஐயமுற்றதற்காகத் துயருற்று ஓடி வந்து அவர் பாதத்தில் பணிந்து, 'யான் பாவி; என்னைக் கடைத்தேற வையுங்கள்' எனக் கதறினுன். அன்று முதல் அவன் தன் தீய வழக்கங்களை விடுத்துப் பெரும் பக்தனுனுன்.

இவ்வாறு பூரியில் சில வருடங்கள் கழிந்தன. தென்னிந்திய புனிதத் தலங்களைத் தரிசிக்க வேண்டுமென்ற விருப்பம் அவர் மனத்தில் தோன்றியது. பக்தர்களும் சிஷ்ய கோடிகளும் இவ்விருப் பத்திற்கு இசைந்தார்களில்லை. தங்களை விட்டு அவர் போக எங்ஙனம்

இசைவார்கள்? அவரை விட்டுப் பிரிவது அவர்கள் வாழ்வில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் இரவியைப் பறிகொடுத்தாற் போன்ற தன்றோ? எனினும், ஒரு நள்ளிரவு ஒரு பக்தன் மாத்திரம் தன்னைத் தொடர்ந்து வர, பூரியிலிருந்து புறப்பட்டு சைதன்ய தேவர் தம் தென்னிந்தியப் புனிதப் பயணத்தை ஆரம்பித்தார். ஸ்ரீகூர்மம், ராஜமஹேந்திரம், கோதாவரி நதிதீரம், சிதம்பரம், கும்பகோணம், தஞ்சாவூர், ஸ்ரீரங்கம், மதுரை, ராமேஸ்வரம், திருவனந்தபுரம், சிருங் கேரியிலிருக்கும் ஸ்ரீ சங்கராச்சாரியார் மடம், உடுப்பி, பண்டரீபுரம் முதலிய தலங்களைத் தரிசித்தார். சென்றவிடமெல்லாம் பாடிக் கொண்டும் தம்மை மறந்து ஆடிக் கொண்டும் சென்றார். பலர் இவர் திருமேனியின் அழகால் கவரப் பட்டு அவர் உள்ளத்தில் சுடர் விட் டெரியும் ஞானக்கினியால், தங்கள் மாசு முழுவதும் எரிக்கப்பட்டு தூயராகி, நல்லொழுக்கமும் தெய்வ பக்தியும் பூண்டனர்.

தீயவழிகளில் மூழ்கியிருப்பவர்களும் கூட சைதன்யரைக் கண்ட மாத்திரத்தில் தங்கள் தீய வழிகளை விடுத்து, புனிதர்களாகி பக்தர்களாயினர். இவ்வாறு அவரைப் பார்த்து துன்மார்க்கத்தி னின்றும் விலகி சன்மார்க்கத்தைக் கடைப் பிடித்தவர் பல்லா யிரவர் ஆவார். ஒரு நகரில் பசுமுகி என்னும் வேசி ஒருத்தி இருந்தாள். பேரழகு வாய்ந்தவள். சிற்றின்பந்தேடித்திரியும் அற்பர்களுக்குத் தன் உடம்பை விற்று பெருஞ்செல்வம் தேடியவள். ஒரு நாள் சைதன்ய தேவர் அவள் வீட்டு வழியாகச் செல்வதைக் கண்டாள். அவருடைய திருமுகத்தில் விளங்கிய பேரொளியும் வனப்பும், பக்தியால் அவர் கண் களிலிருந்து தாரை தாரையாய்ச் சொரியும் கண்ணீரும், பேரானந்தத் தில் ஈடுபட்டு தன் உடலை நினையாமல் அவர் உட்கார்ந்திருப்பதும் அவளை பிரமிக்கச் செய்தன. அந்த நேரமே சிற்றின்பத்தின் நிலையாத் தன்மையையும், தன் வாழ்வின் தீய தன்மையையும் உணர்ந்தாள். உடனே ஓடோடியும் வந்து அவர் திருப்பாதங்களில் விழுந்து, தன்னை ஆசீர்வதித்து புனிதவதியாக்க வேண்டுமென இறைஞ்சினாள். தன் செல்வம் முழுவதையும் பக்தர்களுக்குதவும் பொருட்டு கொடுத்து, சைதன்ய தேவர் அருள் பெற்று, அன்று முதல் பரிசுத்தமாகி அவர் ஆணைப்படி, ஒரு துளசித் தோட்டம் வைத்து, கடவுள் தொண்டிலேயே தன் காலமுழுவதையும் கழிக்கலானாள்.

கொடிய மிருகங்களும், அவற்றினுங் கொடிய கள்வர்களும் வசித் திருந்த கானகங்கள் பலவற்றை அவர் கடந்து செல்ல வேண்டியிருந் தது. பயம் சிறிதுமில்லாமல் ஸ்ரீகண்ணபிரான் பாதாரவிந்தங்களி

லேயே தம் மனம் முழுவதும் செல்ல, ஆனந்தப் பரவசராய் இனிய கானங்களைப் பாடிக்கொண்டும் பகவான் திருநாமங்களைச் சொல்லிக் கொண்டும் நடனஞ் செய்து கொண்டும் அவற்றைக் கடப்பார். புலிகளும், சிறுத்தைகளுங்கூட, அவர் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பாடும் திருநாமங்களைக் கேட்ட மாத்திரத்தில் தங்கள் கொடுமை நீங்கி அவர் பின் நடனமாடின. கள்வர்களும் திருடர்களும் அவரருளுக்குப் பாத்திரமாகிப் புனிதர்களாயினர். இங்ஙனம் தென்னிந் தியத் தலங்கள் யாவும் தரிசனம் செய்து கொண்டு, தம் சீடர்களும் பக்தர்களும் மகிழ்ச்சியால் ஆரவாரித்து எதிர் கொண்டழைக்க பூரி வந்து சேர்ந்தார்.

பூரியில் பக்தர்களுடன் சில மாதங்கள் இருந்து தாம் வெகுநாளாக இச்சித்திருந்தபடி ஸ்ரீகிருஷ்ணபிரான் லீலைகளை நடாத்திய இடமாகிய பிருந்தாவனத்துக்குப் புறப்பட்டார். போகும் வழியில் ஹூஸ்ஸேன் ஷா என்னும் நவாப் இராஜ்யத்தில் பெரும் பதவி படைத்திருந்த இரு சகோதரர்கள் அவரிடத்தில் சரண் புகுந்தார்கள். அவர்கள் பிறவியால் பிராம்மணர்களாயிருந்தும் இந்து தர்மத்தை விட்டு முகம்மதியர்களாகி அவ்வரசன் கீழ் ஒருவர் முதன் மந்திரியாகவும், மற்றொருவர் அரண் மனையில் பெரிய அலுவலராகவும் விளங்கி வந்தார்கள். சைதன்ய தேவர்பால் பிரகாசித்த தெய்வீகத் தன்மையையும் பக்தியையும் அவர்கள் கண்டு அவ்வரசன் ஆணையையும் மீறி அவனிடமிருந்து தப்பித்து வந்து சைதன்யரைச் சார்ந்தனர். அவர்கள் இருவருக்கும் சனாதனர், ரூபர் என்ற பெயர்கள் கொடுக்கப்பட்டன. இருவரும் அவருடன் பிருந்தாவனம் சென்று அவராணைப்படி அவர்கள் வாழ் நாளை பிருந்தாவனத்திலேயே கழித்தனர். முன் அவ்வூர் சிறுகுடிசைகள் சிலவுள்ள ஒரு குக்கிராமமாய் இருந்தது. இப்பொழுது பிருந்தாவனத் தில் காணப்பட்டு அழகு பெற்றுத் திகழும் கோவில்கள் யாவும் இவர்கள் முயற்சியினாலேயே தோன்றின. சைதன்ய தேவருடைய வைணவ சித்தாந்த வர்க்கத்தினருக்கும் அடிகோலியர் இவ்விருவரே.

வழியில் காசி, மதுரா முதலிய இடங்களிலுள்ள கோயில்களைத் தரிசித்துக் கொண்டு பிருந்தாவனம் போய்ச் சேர்ந்தார்; பாலகிருஷ் ணன் லீலைகள் செய்த இடங்களைப் பார்த்துப் பார்த்துப் பரவசமடைந் தார். அவன் திருவிளையாடல்களை ஒவ்வொன்றாக நினைத்து ஆனந்த பரவசராகக் கண்ணீர் விட்டார். அங்கிருந்த ஒவ்வொரு மரமும், தடாகமும், மாடுகளும், மலைகளும் அவருக்குக் கிருஷ்ணனை நினைவூட்

டின. மயிலின் கழுத்திலுள்ள நீலமேக நிறத்தைப் பார்த்துக் கண்ணனை நினைந்து வருந்தினர். மயிலின் இறகுகளைப் பார்த்து அதைத் தலையின் அணியாகப் பூண்டு, விளையாடிய பாலகிருஷ்ணனை நினைத்தார். புல்லாங்குழல் ஓசை கேட்டால் ஸ்ரீ கிருஷ்ணபிரான் வாசிப்பதாக நினைத்து மூர்ச்சித்து விழுந்தார். இவ்வாருக அங்கு சின்னுட்கள் தங்கி, பிரயாகையில் கும்பமேளாவைத் தரிசித்துக் கொண்டு பூரி வந்து சேர்ந்தார்.

நாளாக ஆக அவருக்கு உடல் நினைவே முற்றிலும் போய்விட்டது. பகலும் இரவும் பகவத் சிந்தையிலேயே காலங் கழித்து வந்தார். எந்நேரமும் பக்தர் சூழ்ந்திருக்கப் பாடுவதும், ஆடுவதும் அன்பினுல் மூர்ச்சித்து விழுவதும், மறுபடியும் எழுந்து ஆடுவதுமாகவே காலத்தைக் கழித்து வந்தார். இவ்வாறு கொஞ்சமேனும் ஓய்வின்றி இருந்தது அவருடலுக்குப் பலவிதமான நோய்களையுண்டாக்கி பலவீனமடையச் செய்தது அதை அவர் கொஞ்சமேனும் கவனித்தாரில்லை. அதைப் பற்றிய நினைவு கொஞ்சமேனுமின்றி ஆனந்தப் பரவசத்தில் ஆழ்ந் திருப்பார். அங்ஙனம் பஜனையில் முழு மனத்தையும் செலுத்தி ஈசுவர னிடத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு நாளில் உடலை உகுத்துப் பரமபத மடைந்தார்.

உலகிலுள்ள பக்தர்கள் யாவருள்ளும் சைதன்ய தேவர் முதலணி யில் திகழ்கின்ருர். ஈசுவரன்பால் செலுத்தும் அன்பே பக்தியெனப் படும். மானிடர்பால் பலவிதமான அன்பு வழங்கி வருகின்றது. பெரியவர்கள், நண்பர்கள், பெற்ருேர்கள், மக்கள், மனைவி—முதலியோ ரிடத்தில் மனிதர்கள் தம்மன்பைச் செலுத்துகின்றனர். இவ்வன்பு யாவற்றிலும் ஒருவன் தன் இல்லாளிடம் வைத்திருக்கும் அன்பே முதிர்ந்ததெனக் கருதப்படுகிறது. ஏனெனில் அவர்கள் இருவரும் இரு உடலெனினும் ஒருயிரன்ருே! இம் முறைகள் வாயிலாகவன்றி நாம் அன்பு நுகர்ச்சியை அறியோம். எங்ஙனம் ஒருவனுக்கு ஒன்றைக் கற்பிக்க வேண்டினுல் அவனுக்குத் தெரிந்த மொழியில் சொன்னுல்தான் பயன்படுமோ, அங்ஙனமே மனிதரும் கடவுள்மேல் அன்பு செலுத்த வேண்டும்போது இம்முறைகளை பின்பற்றலே சிறந்த பயனைத் தரும். தாயென்பதும், தந்தையென்பதும் மக்களென்பதும், மனைவியென்பதும் நம் மனத்தில் தானே அன்பை உண்டாக்குகிறது. ஆதலால், ஈசுவரன்பால் அன்பு பெருக்குவதற்கும் இதுவே சிறந்த வழி. இக்காரணங் கொண்டே வைஷ்ணவ சித்தாந்

தத்தில் சாந்தம், தாஸ்யம், சக்யம், வாத்சல்யம், மதுரம் என பக்தி ஐந்து விதமாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. சைதன்ய தேவர் மதுர பாவ பக்தியில் ஈடு பட்டவர். தன்னைப் பெண்ணாகவும் ஈசனை நாதனாகவுங் கொண்டு பக்தி செலுத்துவதே மதுர பாவ மெனப்படும். இன்றுவரை இம்மதுரபாவத்தில் ஈடுபட்ட பக்தர்களில் அவரே முதன்மையாக விளங்குகின்றார்!

# பிரான்சிஸ் அடிகள்

அசிஸி என்னும் நகரத்தில், பெர்னடோன் (Bernardone) என்பார் வாழ்ந்தார். துணி வாணிகத்தில் அவர் சிறப்புற்றவர். அவருக்குப் பிரான்சிஸ் என்ற ஆண்மகவு ஒன்றிருந்தது. அம்மகவை அவர் கண்ணுங் கருத்தாக வளர்த்து வந்தார். தந்தை பெருஞ் செல்வம் படைத்தவராத லால் பிரான்சிஸ் மிக்க செல்வாக்குடனும், சிறப்புடனும் வளர்ந்து வந்தான். வயதிற்கு வந்தபோது அவன் மிகத் தாராளமாய்ச் செலவு செய்து கொண்டிருந்தார்; அதனுல், மற்ற செல்வர்களின் புதல்வர்களைக் காட்டிலும் அதிகப் பெருமையுடன் விளங்கினர். இது பெர்னடோனுக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாக்கியது. பிரான்சிஸோ நாள் முழுவதும் விளையாட்டிலும், தமக்குக் களிப்புண்டாக்கும் நிகழ்ச்சி களிலுமே பொழுதுபோக்கி வந்தார். சமயநீதி யொன்றும் அறிய முயலாமலும், வேறு உயர்ந்த இலக்கியங்கள் எவற்றைப் பற்றியும் சிந்தியாமலும், மனம்போன போக்கெல்லாம் சென்று அற்ப விஷய சுகங்களே பெரிதெனக் கருதி, வாணாளை வீணாளாக்கி வந்தார்.

அந்நாளில், திடீரென்று பிரான்சிஸ் நோயால் பாதிக்கப்பட்டு, வலியிழந்து படுக்கையில் கிடக்கலானர். நொடிப் பொழுதில் நோயால் பீடிக்கப்பட்டு, தம் உடல் வலிமையையும் அதனுல் வரும் சுகங்களையும் அவர் இழக்க நேர்ந்தது. இது அவருக்கு அறிவைத் தருவதாயிற்று. மனிதவுடம்பின் அற்ப பலத்தையும், அது ஒரு ஜடப் பொருள் என்பதை யும், இவ்வுலகத்தின் நிலையாத் தன்மையையும் அறியலானர். வெறும் இந்திரிய போகங்களின் நிலையற்ற தன்மையை உணரலானர். விஷய சுகங்களே உண்மையென ஓடித் திரியும் மாந்தரின் மயக்கத்தையும், மதியின்மையையும் கண்டு வியப்புறலானர்; அந்தநாள்வரை, தான்

வாழ்ந்து வந்ததை நினைத்து, தம்மைத் தாமே நொந்துகொண்டார்; இனி அவற்றில் ஒரு சிறிதும் மனத்தைச் செலுத்துவதில்லை என முடிவு செய்து கொண்டார். அந்நாள் முதல் அற்ப சுகங்களை அறவே ஒதுக்கி என்றும் அழியாச் சுகம் பெறக் கருதினர். 'அங்கிங் கெனதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி, அருளொடு நிறைந்த பரம் பொருளைத் தம் உயிர்த் துணையாகக் கொண்டார்; அவனை மறந்த நாளெல்லாம் கெட்ட நாளென நினைத்து, ஒவ்வொரு நொடியும் அவனுடைய தெய்வ வடிவைப் பற்றியே சிந்திந்தும், அவனையடை வதற்கு உதவி செய்யும் சாதனைகளை வந்தித்தும் தம் காலத்தைக் கழித்து வந்தார்.

இயேசுநாதரைப் பற்றியே எப்பொழுதும் தியானம் செய்வார் பிரான்சிஸ்; அவரைப் பற்றி நினைக்க நினைக்க அவரைப் போல் தாமும் ஒரு பெரிய தியாகியாக விளங்கித் திருவருள் பெறவேண்டுமென்னும் அவா அவருக்குப் பெருகிற்று. ஒருநாள் பிச்சைக்காரன் ஒருவனுக்குத் தம்முடைய உயர்ந்த ஆடைகளைக் கொடுத்து அவனுடைய எளிய ஆடையை வாங்கியணிந்து கொண்டு, அவரும் பிச்சைக்காகச் சென்றார். மற்றொரு நாள் சில குஷ்டரோகிகளைக் கண்டதும் அவர் மனம் அருவருப்புற்று அவர்களை விட்டு அப்பால் செல்லும்படி ஏவிற்று. தமக்கு இலட்சியமாய் விளங்கும் இயேசுபெருமான் எப்படி இவர்களுக் கும் கருணைகாட்டி வந்தார் என்ற நினைவு அவருள்ளத்தில் அப்பொழுது எழுந்தது. உடனே, அக்கொடும் நோயால் துன்புற்றுக் கொண்டிருப் பவர்களை அடைந்து, மிக்க அன்புடனே ஆறுதல் வார்த்தைகள் சொல்லி, தம்மிடமிருந்த பணத்தையும் கொடுத்து உதவினர்.

ஒவ்வொரு நாளும் ஈசுவர பக்தியும் கடவுள்பால் மெய்யன்பும் அதிகரித்துக் கொண்டே வந்தன. பகவானைத் தவிர வேறு எதைப் பற்றி நினைத்தாலும், அக்காலம் வீணாயிற்றெனக் கருதலானர். அவற்றைப் பற்றி எண்ணுவதே அவருக்குப் பெரிய பாரமாகத் தோன்றியது. பொருளைப் போற்றிக் காப்பாற்றுவது, ஒரு பயனுமில் லாமல் பெரிய சுமையொன்றைத் தாங்கிக் கொண்டிருப்பதுபோல் தோன்றிற்று. மிகச் சிறு உணவுப் பொருளுக்கு ஆசைப்பட்டு, பட்சிகள் எவ்வாறு வலைக்குள்ளகப்பட்டு, வானத்தில் உயரப் பறந்து திரியும் ஆனந்தத்தையும், சுதந்திரத்தையும் யிழக்கின்றனவோ, அதுபோல மனிதனும் கேவலம் பொற்காசுகளுக்காகவும், மற்ற அற்ப சுகங்களுக் காகவும் ஆசைப்பட்டு, அதனால் தளையுற்று, என்றும் அழியாப் பேரின்பத்தை இழந்தவன் ஆகிறான் என அவர் அறிந்தார். ஆதலால்,

ஒரு நாள் சில துணிகளையும் நாணயங்களையும் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினார் பிரான்சிஸ்!

ஒரு சிறு மடத்தைக் கண்டு, அதனுட்சென்று, தம்மிடமிருந்த கைப்பொருள் யாவையும் அம்மடத்தைச் சார்ந்த சாதுவினிடம் கொடுத்தார்; அங்கேயே தங்கி பகவத் தியானத்திலேயே காலத்தை ஈடுபடுத்த உறுதி பூண்டார். இயேசுநாதர் போலவே தாமும் சிறிதும் ஆடம்பரமின்றி மிகத் தாழ்மையுடன் இருக்க முடிவு செய்தார். பகவானின் திருநாமங்களைப் பஜிப்பதில் நாள் முழுவதையும் கழித்தார்; உணவுக்காக மட்டும் சிறிது நேரம் வெளியே சென்று வருவார். வீடு தோறும் சென்று இரந்துண்பார்; இச்செயலைக் கண்ணுற்ற மக்கள் வியப்படைந்தனர். பலர் கேலி செய்தனர்; பலர் 'பயித்தியக்காரன்!' என்று ஏளனம் செய்தனர்; அவ்வார்த்தைகள் ஒன்றும் அவரைப் பொருட்படுத்தவில்லை. ஒரு பெரிய கூட்டம் அவரைச் சுற்றிக் கொண்டது. எல்லாரும் அவரைப்பற்றி வேடிக்கை வார்த்தைகளைச் சொல்லி, பெரிய ஆரவாரம் செய்தனர். அவர் தந்தை பெர்னடோனும் ஆரவாரத்தைக் கேட்டு அங்கு வந்தார். அருமைப் புதல்வன் - தவப்புதல்வன் பிரான்சிஸ் பிச்சைக்காரனாக வந்திருப்பது அவர் மனத்தில் அளவில்லா வெட்கத்தையும், வெறுப்பையும் உண்டாக்கியது. பிரான்சிஸை வாயில் வந்தபடி திட்டினார்; பலாத்காரமாய்ப் பிடித்திழுத்துக் கொண்டு தமதில்லம் சென்று அங்கோர் அறையில் பூட்டி வைத்தார். "என்ன! நீ அதிமூடனாயிருக்கிறாயே! கடவுள் பக்திக்கும் அளவில்லையா? என்னிடத்திலிருக்கும் பெருஞ் செல்வத்திற்கு அதிபதியாகி எல்லா மதிப்புடனும் பெண்டு பிள்ளைகளுடனும் இன்பம் அனுபவிப்பதை விட்டு, 'உலகம் நிலையாதது' என்கிறாய்! என்னென்னவோ பிதற்றுகின்றாய்! இப்படி வறுமையுடன் பிச்சை எடுப்பது உனக்கு வெட்கத்தை உண்டுபண்ணவில்லையா?" எனப் பலவாறுரைத்துப் பயத்தாலும், நயத்தாலும் அவரைத் தம் வழிக்குத் திருப்ப முயன்றார்.

தந்தை ஏது செய்தும்-என்ன சொல்லியும் பிரான்சிஸ்-மனம் இணங்கவில்லை. வாழ்வெல்லாம் வெறுங்கனவே என்றும், என்றும்-எவ்விடத்தும்-எல்லாப் பொருட்களிலும் - பாலில் வெண்ணெய்போல - எள்ளில் எண்ணெய்போல - விளங்கும் பரமபிதாவையடைவதே வாழ்க்கையின் இலட்சியமென்றும் உணர்ந்த அவர் எப்படி தந்தை எண்ணத்திற்கு இசைய இயலும்? ஓர் இரவு! அனைவரும் கண்ணயர்ந்த நேரம் வீட்டை விட்டு மறுபடியும் வெளியே போய்விட்டார். இதையறிந்த பெர்னடோனுக்கு அடக்க முடியாத கோபம் பிறந்தது. பிரான்சிஸ்

தன் குடும்பத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பு எனக் கருதினர். தன் வார்த்தைகளை பிரான்சிஸ் கொஞ்சமேனும் மதியாததை நினைத்து மனக் கொதிப்படைந்தார். பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது. தன் பெருஞ்சொத்திலும், செல்வத்திலும் அவருக்கு செப்புக் காசுக்குக் கூட உரிமை இல்லையென வழக்குமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். ஆனால் பிரான்சிஸ் அப்பொழுது செய்த காரியம் அவருக்கு மிகுந்த வியப்பை உண்டாக்கியது. நீதிபதி முன்னிலையில் பிரான்சிஸ் வந்து "இதுவரை நான் பெர்னடோனுடைய புதல்வனென யாவராலும் கருதப்பட்டு வந்தேன். அவருடைய சொத்தில் எனக்கு கொஞ்சமேனும் வேண்டாம். நான் அணிந்திருக்கும் உடை அவருடையது தான்! அதையும் இப்பொழுது கழற்றிக் கொடுத்து விடுகிறேன். இன்றுமுதல் கல்லினுள்ளிருக்கும் தேரைக்கும், கருப்பைக்குள் இருக்கும் சிசுவிற்கும் உணவளிக்கும் பரம பிதாவே என் தந்தை" எனச் சொல்லி தாம் அணிந்திருந்த அங்கியையும் கழற்றி நீதிபதி முன்னர் வைத்தார். இப்பெரும் தியாகத்தைக் கண்ணுற்ற யாவரும் வியப்பில் மூழ்கினர். பிரான்சிஸ் இப்பொழுது பிரான்சிஸ் அடிகள் ஆயினர்.

நீதி மன்றத்தை விட்டு, பிரான்சிஸ் அடிகள் தாம் முன்னே தங்கியிருந்த மடத்துக்கு மீண்டும் சென்றார்; அம்மடத்தின் சிதைவுற்ற பகுதிகளைத் தம் கைகளினாலேயே சீர்திருத்தினர்; உணவுக்காக வீடுகள் தோறும் இரப்பார்; இரந்து பெற்ற எளிய உணவை உண்பது மிகவும் கடினமாகவே இருந்தது. ஆயினும் தமக்கு இலட்சியமாக விளங்கும் நாஸரீன் நகரத்துப் பெரியாரும், தமது வாழ்க்கையில் இப்படியிருந்தரென்பதையும், தாம் அப்பெரியாரைப் பின்பற்றும் பேறு பெற்றதைப் பற்றியும் நினைத்து, எளிய அவ்வுணவையும் ஆனந்தத்துடன் உண்பார். நாள் முழுதும் ஆத்ம தியானத்திலேயே ஆழ்ந்திருப்பார்; காலம் போவதையும் அறியாமல் கடவுள் சிந்தையிலேயே ஊன்றி நிற்பார். மனத்தை வேறு எதிலும் செல்லாமல் அடக்கி, ஈசுவரனையே நாடச் செய்வார். தியானம் செய்யும் சமயம் பேரன்பின் மிகுதியால் கண்ணீர் விடுவார். என்பெலாம் நெக்குடைய உரோமஞ்சிலிர்ப்ப உடலிளக மனதழலின் மெழுகாய் இடையருதுருகி அன்பினுல் மூர்ச்சிப்பார்; 'நாயினும் கடையனை என்னையும் கரையேற்ற வேண்டும்' எனக் கதறுவார்; இப்படியே பல நாட்கள், வாரங்கள், மாதங்கள் கழிந்தன. கடைசியில் அவர் செய்த அருந் தவத்தின் பயனாக, அவர் வேண்டிய தெய்வ தரிசனம் கிடைத்தது! இயேசுநாதரின் திருவுருவத்தைக் கண்ணாரக் கண்டு பேரானந்தமுற்றார்! அப்பொழுது அவருக்கு ஒரு

தெய்வீகக் கட்டளை பிறந்தது. "அப்பா! நீ கண்ட மெய்ப் பொருளை யாவருக்கும் சொல்லி, அவர்களையும் புனிதராக்க முயல்க! திருவருளால் உணர்ந்த தெய்வீகத் தத்துவங்களை எல்லாருக்கும் பரப்புக!" என்ற அருள்வாக்கு இயேசுவே சொல்லியதாக அவருக்குத் தோன்றிற்று.

உடனே பிரான்சிஸ் அடிகள் அவ்வாணையை அடிபணிந்து ஏற்றுத் தம்மிருக்கையை விட்டு வெளிப்போந்து திருவருளின் உண்மையைப் பற்றியும் சிறப்பைப் பற்றியும் சென்றவிட மெல்லாம் சொல்லிக் கொண்டே சென்றார். எளியாரையும், வறுமையாலும் பிணிகளாலும் பீடிக்கப்பட்டிருப்பவர்களையும், இன்னும் மற்றத் துன்பங்களுக்கு ஆட்பட்டவர்களையும் காணுந்தோறும் மனமிரங்கிப் பரிதபித்து, தம தன்பும் இரக்கமும் அவர்கள்பாற் செல்ல, இனிமையான வார்த்தை களைச் சொல்லி அவர்களைத் தேற்றுவார். நினைக்கவும் அருவருப்பைத் தரும் கொடிய வியாதிகளால் வருந்துபவர்களிடமும் சென்று, அவர் களிடம் மிகவன்புடன் பேசி, அவர்களுக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்வார். இதைக் கண்ட அன்பும் அறிவும் நிறைந்த சான்றோர் சிலர், இவருடைய பேரன்பினாலும் கருணையினாலும் தூண்டப்பட்டு, இவரைத் தலைவராகக் கொண்டு தாங்களும் உழைக்க முன்வந்தார்கள். (12–ஆம் நூற்றாண்டில் தோன்றி, பல நூற்றாண்டுகளாக நீடித்துநின்று, ஐரோப்பிய மக்கட் சமுதாயத்திற்கு ஒரு பேருதவியாகத் திகழ்ந்த பிரான்சிஸ் அடிகள் சங்கத்தின் (Order of St. Francis of Assissi) தொடக்கம் இதுவேயாகும்.)

பிரான்சிஸ் அடிகளின் பொறுமையும் பரிசுத்தமும் மிகத் தெய்வீக மானவை. அவர் புவனமனைத்தும் வியப்புறும்படி அவ்வளவு அடக்க மும் பணிவும் உள்ளவர். 'நான்', 'எனது' என்பதையறவே யொழித்து, யாவருக்கும் பணிவிடை செய்யக்கூடிய தன்மை வாய்ந்தவர். குஷ்ட நோய் வியாதிகள் எல்லாவற்றுள்ளும் மிகக் கொடியதென்று அன்றும் கருதப்பட்டு வந்தது. ஆதலால் அந்நோயாளிகளைத் தீண்டவும், அவர்களின் அருகில் வரவும் கூட மக்கள் பயந்தார்கள். மிக நெருங்கின உறவினர்கூட அக்கொடிய நோயால் வருந்துபவர்களுக்கு உதவி செய்யமாட்டார்கள். ஆதலால் இப்பிணியாளர்கள் படும் துன்பம் சொல்ல முடியாததாயிருந்தது. பிரான்சிஸ் அடிகளின் கருணை உதவியற்ற இவர்கள்பாற் சென்றது. தமதுடம்பின் நிலைமையையும் தேக சுகத்தைப் பற்றியும் ஒரு சிறிதும் எண்ணாமல், அவர்களிடம் சென்று, அன்புடன் நல்ல வார்த்தைகளைப் பேசி அவர்களைத் தேற்றி, வேண்டிய சிகிச்சைகளைச் செய்வார். அவரைப் பின்பற்றின

அவருடைய மற்ற தோழர்களுக்கும் குஷ்டரோகிகளுக்குச் சிகிச்சை செய்வதே முதற் கருத்தாயிருந்தது. ஒருநாள் ஒரு குஷ்டரோகியை எடுத்துக் கொண்டு வந்து சிகிச்சை செய்தார்கள். அவனோ தனது நோய்த் துன்பத்தால் அதிகக் கோபத்துடன் இருந்தான். அவனுக் குதவி செய்ய வந்த பிரான்சிஸ் அடிகளின் தோழர்கள் யாவரையும் மிகக் கடிந்து மரியாதையின்றிப் பேசத் தொடங்கினான். எவ்விதமான உதவிகள் செய்தும் அவனடங்காமலிருந்ததனால் தோழர்கள் சலிப் படைந்து பிரான்சிஸ் அடிகளிடம் சென்று முறையிட்டனர். அவர் கருணைக் கடல்! தாமே போய் சேவை செய்ய இசைந்து அவனிருக்கு மிடம் சென்றார். அவனை நோக்கி 'அப்பா உனக்கு ஆண்டவன் அருள் புரிவானாக!' என்றார். அவனோ 'என்னிடமிருந்த நல்ல பொருள்களை யெல்லாம் எடுத்துக் கொண்டு கொடிய துன்பத்தை அனுபவிக்கச் செய்த கடவுள், இன்னும் என்ன கொடுக்கப் போகிறான்?'' என்று பதிலுரைத்தான். அதைக் கேட்ட அடிகள் 'அப்பா கோபியாதே! உனக்குச் சேவை செய்ய வந்திருக்கிறேன். உனக்கென்ன செய்ய வேண்டும்? சொல்' என்று கேட்டார். அவன் 'என் உடம்பின் நாற்றம் பொறுக்க முடியவில்லை; என்னைக் குளிப்பாட்டுங்கள்' என்றான். உடனே வெந்நீர் தயாரித்து அதில் வாசனை மூலிகைகள் போட்டு அவனைத் தம் கையினால் நன்றாகச் சுத்தம் செய்து குளிப்பாட்டினார். அவர் கைப்பட்ட விடமெல்லாம் நோய் நீங்கிக் குணமாயிற்று! அக் குஷ்டரோகி அதுகண்டு வியப்புற்று அவரை வணங்கிப் போற்றினான்.

இவ்வாறு உயர்வு தாழ்வின்றி, யாவும் பகவானுடைய கட்டளையே என எண்ணி, யாவருக்கும் தம்மாலியன்ற எல்லா உதவியும் செய்து வந்தார். எல்லா உயிர்களிடத்திலும் பெருங் கருணையைக் காட்டி வந்தார். இயற்கை முழுதும் தமது பரம பிதாவின் வடிவமென்றே அவருக்குத் தோன்றிற்று. சூரியனும், சந்திரனும், மிக அழகான மலைகளும், காடுகளும், ஏரிகளும் அவருக்குப் பரம பிதாவின் பெருமை யைக் காட்டின. இயற்கையில் கண்ட ஒவ்வொரு செயலிலும் ஈசுவர சக்தியைக் கண்டு மகிழ்வார்; அவனே இவ்வுலகம் யாவையும் காக்கும் கர்த்தா எனவும் அவனன்றி ஓரணுவுமசையாது எனவும் தேர்வார். அவனை நினைப்பதும் அவன் ஆணைப்படி வாழ்நாளை நடாத்துவதுமே தம் கடமை என நினைப்பார்; தமது சங்கத்தைச் சார்ந்தவர்களுக்கு அவர் அருளியதாவது: ''நம்மைக் காணும் போதெல்லாம் மக்களுக்கு இறைவனைப் பற்றிய நினைவு வருமாறு நாம் நடந்தொழுக வேண்டும்.''

ஆண்டுகள் பல ஓடின. அடிகளின் உடல் வலிமை குன்றியது. ஆனால், அவரது மனோ வலிமையும் கடவுள் பக்தியும் அதிகரித்தனவே

யொழிய ஒருசிறிதும் குறையவில்லை; முதிர்ந்த பருவத்தில் அவர் மிகவும் அல்லலுற்ருர்; இறுதிக் காலம் நெருங்கியது. அவரைக் கதியெனக் கொண்டவர்கள் யாவரும் அவரைச் சுற்றி, துயர் நிறைந்த மனத்தின ராய் நின்றுகொண்டிருந்தனர். அப்பொழுது அவர் தன்னைச் சுற்றி யிருந்தவர்களை நோக்கி ''மரணத்தைக் கண்டு பயப்பட வேண்டிய தேவையில்லை. ஆனந்தமடைந்து வாழ்வதற்கு உரிய வழியே மரணம்'' என்ருர். மேலும் 'மற்ருேர் என்பால் செய்த குற்றங்கள் யாவையும் மன்னிக்கிறேன். இறைவன் உங்களுக்கு அருள் புரிவாஞக!' என்றருளி கர்த்தருடன் ஒருமையுற்ருர்.

# முகம்மது நபி

முகம்மது நபி என்னும் பெரியார் அரேபியா தேசத்தில் பிறந்தவர். தற்சமயம் இலட்சக்கணக்கான மக்களால் உலக முழுதிலும் பின்பற்றி வரும் இஸ்லாமிய மதத்திற்கு அடிகோலியவர்; இம்மதத்தில் ஈடுபட்டு ஞானமார்க்கத்தையும், முத்திநெறியையும் நாடிச்செல்பவர் யாவருக்கும் ஓர் அரிய வழிகாட்டியாய் விளங்கி வருபவர். கி. பி. 570 ஆம் ஆண்டு மக்கா மாநகரத்தில் முகம்மது நபி தோன்றியருளினர். அவருக்கு 'முஹம்மத' என்னும் நாமம் சூட்டப்பட்டது. இதன் பொருள் 'கொண்டாடப்பட்டவர்' என்பதாம். அவர் பிறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்னரே அவர் தந்தையார் அப்துல்லா காலமாயினர். எனவே, பாட்டனர் அப்துல் முத்தலீப் என்பவரே அவரை அன்புடன் வளர்த்து வந்தார். அவரது இளம் பருவத்திலேயே அவர் தாய் அமீனவும் அதற்குச் சில நாட்களுக்குப் பின் அவர் பாட்டனும் இயற்கை எய்தினர். அதற்குப் பின் அவர் சிற்றப்பனை அபூதலீப் என்பவரே முகம்மதை வளர்த்து வந்தார்.

முகம்மதுக்கு வயது ஆக ஆக நற்புத்தியும் நுண்ணிய அறிவும் வளர்ந்து வந்தன. ஒரு பெரிய பதவியை யடைந்து மக்கள் யாவருள்ளும் முதன்மையாய்ப் பிற்காலத்தில் விளங்குவார் என்று, யாவரும் ஊகித்து வியக்கும் வண்ணம் நற்குணங்கள் பல இளமையிலேயே அவரிடத்தில் விளங்கின. அவர் இயற்கையிலேயே சாந்த குணமும் உயர்ந்த நோக்கமும் பெற்றிருந்தார். எவரிடத்திலும் இனிமையுடனும் அன்புடனும் பேசுவார்; ஏழைகளிடத்து மிகவும் இரக்கங் கொண்டு, அவர்களுக்குத் தம்மாலியன்ற உதவியைச் செய்வார்; அவருடைய சிற்றப்பன் நடத்தி வந்த வணிகத்தில் நஷ்டம் வரவே அவரது குடும்பம்

கஷ்ட நிலையடைந்தது. அப்பொழுது வீட்டிலிருந்த சிறுவர்களெல்லாம் ஆடு, மாடு, ஒட்டகம் முதலியன மேய்க்கும் தொழில் செய்ய நேர்ந்தது. அவ்வாறு கால்நடைகளை மேய்க்கக் காடுகளுக்குச் செல்லுங்கால், முகம்மது மற்ற சிறுவர்களோடு சேர்ந்து விளையாடமாட்டார். ஒரு தனியிடத்தில் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையிலூன்றியிருப்பார்!. சிற்சில சமயங்களில் தம் சிற்றப்பனுடன் வணிகம் செய்ய வெளிநாடுகளுக்கும் செல்வார். வாணிபத்தில் ஈடுபட்டு அதில் மிகத் திறமையுடையவர் என்ற பெயர் பெற்றார். அந்நகரத்தில் அக்காலத்தில் பெருஞ்செல்வி யாக விளங்கின காதீஜா என்பவள் முகம்மதின் திறனை வியந்து வாணி கத்தில் தனக்கு உதவியாயிருக்கும்படி அவரை அமர்த்திக் கொண்டாள். நெருங்கிப் பழகப் பழக அவளுக்கு முகம்மதுபால் முதிர்ந்த அன்பு தோன்றியது. ஆதலால், கொஞ்ச காலத்தில் அவரைத் திருமணம் புரிந்தனள்.

காதீஜாவை மணம்புரிந்த பிறகு, முகம்மதுக்கு வாணிபம் செய்து பொருள் சேகரிக்க வேண்டிய தேவை இல்லாமையால், தம் வாணிகத் தில் அதிகக் கவனம் செலுத்தாமல், ஆத்மீகத் துறையிலேயே காலத் தைக் கழித்து வந்தார். அவருடைய அன்பு, சாந்தம், தன்னலங் கருதாமை முதலிய நற்குணங்களை யறிந்த அவ்வூரார் அவரை மிகப் போற்றி வரலாயினர். அவருக்கு 'அல் அமீன்' (நம்பிக்கைக்குரியவர்) என்னும் பெயரையும் கொடுத்தனர். எனினும், அவர் மற்றவர்களுடன் அதிகம் பேசாமல் ஈசுவர தியானத்திலேயே மனத்தைச் செலுத்தி வந்தார். ஒவ்வொரு வருடத்திலும் ரம்லாம் மாதத்தில் மக்காவுக்கு அருகிலுள்ள ஒரு மலைக்குச் சென்று ஒரு குகையில் தியானம் செய்து வருதல் வழக்கம். உலக நினைவுகளை அறவே அகற்றி, தம் மனம் முழுதையும் கடவுள்பாற் செலுத்துவார். மாந்தர் படுந் துன்பம் நீக்க ஏதாவதொரு மார்க்கம் உபதேசித்தருள வேண்டுமென ஈசனைப் பலகா லும் இரப்பார். அந்நினைவிலே தம்மையே மறந்து விடுவார். ஊரையும் பேரையும் ஊணையும் மறந்து, அச்சிந்தனையிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி, நாட்கள் கழிவதையும் அறியாமல் வீற்றிருப் பார். இப்படித் தியானத்தில் அமர்ந்திருக்கும் பொழுது ஒரு நாள் அவருக்கு ஈசுவர தரிசனம் கிட்டியது. இந்த நூல்வத்துக்கு (அனுபூதிக்கு)ப் பின் இஸ்லாத்தை உலகத்தார்க்கு உபதேசம் செய்யும் படி அவருக்கு இறைவன் கட்டளை பிறந்தது.

அன்றுமுதல் தமது வாழ்க்கை முழுதும் இறைவன் கட்டளையை நிறைவேற்றுவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தலானார்.

அரேபியா நாட்டு மக்கட் சமூகத்திலிருந்த பல தீய வழக்கங்களை அறவே யொழித்து நற்பழக்கங்களைக் கைக்கொள்ளும்படி செய்து, வெறும் விக்கிரகங்களையும், சிலைகளையும் ஆராதிப்பதில் யாதொரு பயனுமில்லை யென்றும், எல்லாம் வல்ல ஈசன் ஒருவனே யென்றும், இப்பாரிலுள் ளோர் யாவரும் அவனுடைய புத்திரர்களாகையால் எல்லாரும் சகோ தரர்கள் என்றும் அவர் போதித்தார். அவர் போதித்த தீனுல் இஸ்லாத்தின் முக்கிய கொள்கைகளான "நித்தியமாய், நிர்மலமாய், நிட்களமாய், நிராமயமாய், நிறைவாய், நீங்காச் சுத்தமுமாய், தூரமு மாய், சமீபமுமாய், துரியநிறைச் சுடராய் எல்லாரிடத்திலும் அந்தர் யாமியாய் விளங்கும் ஈசுவரன் ஒருவனே, மாந்தர்கள் இவ்வுலகத் துன்பங்களிலிருந்தும் பற்றுக்களினின்றும் கடைத்தேறுவது அவனரு ளாலேதான் இயலும்" என்ற இவ்விரண்டையும் அவர் தீவிரமாய் உபதேசித்தார். இறைவனை மனங்கசிந்து வேண்டியிரத்தலாலும், அவனுடைய புத்திரர்களான யாவருக்கும் சேவை செய்வதாலுமே அவன் திருவருளைப் பெற இயலும் என்பதை உணர்ந்தார்; உபதேசித் தார்.

முதன்முதல் இவரது உபதேசத்தை ஏற்றுக் கொண்டு தீனுல் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு முஸ்லீம் ஆகியவர்கள் அவர் மனைவியும் சில நண்பர்களுமே. எனினும் தம்மிடம் வருபவர்களுக் கெல்லாம் அவர் தீனுல் இஸ்லாத்தைப் பற்றிப் போதித்துக் கொண்டே வந்தார். அதன் பயனாகப் பலர் இப்புது மதத்தின் உண்மையை உணர்ந்து இதில் சேரத் தொடங்கினர். நபிகளின் புகழும் கீர்த்தியும் நாடெங்கும் பரவிக் கொண்டே வந்தது. ஆனால், அந்நகரத்தை அச்சமயம் ஆண்டு வந்த 'குறைஷ்' குலத்தார்க்கு மட்டும் இது பிடிக்கவில்லை. புராதன பழக்க வழக்கங்களை மாற்றவும், பழைய தெய்வ ஆராதனைகளை விட்டு விடவும், முகம்மது நபி செய்த பிரச்சாரங்கள் அவர்களுக்கு அருவருப்பை யுண்டாக்கின. அவரைப் பின்பற்றுவோர்கள் அதிகமாகவே இவர் களுடைய வெறுப்பு மேலும் அதிகரித்தது. ஆதலால், நபிகளுக்குப் பல விதத்திலும் தீங்கிழைக்கத் தலைப்பட்டனர்.

நபிகளின் உபதேசங்களைக் கேள்வியுற்ற பலர், பல வெளி நகரங் களிலிருந்தும் திரளாக வந்து கொண்டிருந்தனர். மக்காவுக்கு வந்த யாத்ரீகர்களும் நபிகள் பெருமானின் உபதேசம் ஏற்று முஸ்லீம்களாகிச் சென்றனர். இப்படி உபதேசம் ஏற்றுக் கொண்டவர்களிற் சிலர் பல யாத்ரீப் என்னும் நகரத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தம் நகரம் திரும்பிச் சென்று மற்றவர்களுக்கும் நபிகள் பெருமானின் பேரன்பு

மகிமையையும். அவரது திருவாக்கின் உண்மையையும் எடுத்துச் சொல்ல, அவர்களும் தீனுல் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு முஸ்லீம் களாயினர். நபிகளின் பெருமையும் கீர்த்தியும் பெருகப் பெருக, குறைஷ் குலத்தாரின் கொடுமையும் வெறுப்பும் அதிகரித்து வந்தன. இக் கொடுமைகளைப் பொறுக்க மாட்டாது நபிகளும் அவர் நண்பர்கள் சிலரும் மக்காவை விட்டு யாத்ரீப் போகப் புறப்பட்டனர். இதைக் கேள்வியுற்ற அக்காபிர்கள் முன்னிலும் அதிக ஆத்திரம் கொண்டு, எவ்விதத்திலாவது நபிகளைக் கொன்றுவிட வேண்டுமென்னும் எண்ணங் கொண்டு அவரைத் தேடி வந்தார்கள். அவரில்லத்தில் இல்லாதிருந் தமை கண்டு யாத்ரீப் செல்லும் பாதையில் அவரைத் துரத்திச் சென்றூர்கள். நபியவர்களும் இம்மூர்க்கர் தம்மைத் தொடர்தலை அறிந்து தம் நண்பர் ஒருவருடன் ஒரு குகையில் ஒளிந்து கொண்டிருந் தார். அவரைத் தேடி வந்தவர்கள் பலர் ஆயுதபாணிகளாய் அக்குகை யின் வாயிலில் தேடிக் கொண்டிருந்தார்கள். எதிரிகளின் சப்தம் கேட்டு, அவர்கள் பலபேர்களாயும் ஆயுதபாணிகளாயும் இருப்பதைக் கண்ணுற்ற நபிகளின் நண்பர்கள் நபிகளை நோக்கி 'நாம் இருவரே யிருக்கின்றோம். அவர்கள் பலர் இருக்கின்றனரே; அவர்கள் நம்மைக் கண்டு கொண்டால் என் செய்வது' என்றூர். அதற்கு நபிகள், "நாம் இருவர் மட்டுமே இருக்கின்றோமென யெண்ணி அச்சங்கொள்ள வேண்டாம். நாம் இருவர் மட்டுமல்ல; நம்முடன் மூன்ருவதாக ஒருவன் இருக்கின்றுனென்பது உமக்குத் தெரியவில்லையா? நமக்குத் துணையாக அல்லா ஹி ஆலா இருக்கும்வரை நமக்கு என்ன பயம்?" என்று மறு மொழியளித்தார். எதிரிகள் கொஞ்ச நேரம் தேடி விட்டு, குகையின் வாயிலில் சிலந்திப் பூச்சிக் கூடுகள் சில இருப்பது கண்டு குகைக்குள் எவரும் இருக்கமாட்டாரென நினைத்துத் தம் வழிச் சென்றனர். நபிகளும் அவர் நண்பரும், அவர் சென்ற பிறகு குகையை விட்டு வெளி யேறி வேறு தொந்தரவின்றி யாத்ரீப் நகரம் சேர்ந்தனர். அந் நகர வாசிகள் யாவரும் நபிகளின் உபதேசத்தில் நம்பிக்கை யுள்ளவர்களாய், முஸ்லீம்களாகி நபிகளை ஏகமனத்துடன் வரவேற்றனர். நபிகளை அவர்கள் அத்துணையன்புடன் வரவேற்றதின் நினைவாக அந்நகரத் துக்கு 'மதீனத்துன் நபி' அல்லது 'நபிகளின் நகரம்' என்னும் பெயர் கொடுத்தனர். அதுவே இன்று மதீனு என்று போற்றப் பெறுகின்றது.

மதீனுவுக்கு வந்த பின்னும் நபிகளின் விரோதிகள் சும்மாயிருந் தார்களில்லை. பெரிய சேனைகள் சேர்த்துக் கொண்டு மதீனு மீது படை யெடுத்தனர். ஆதலால் நபிகள் பலருடனும் சண்டை செய்யவும் நேர்ந்தது. ஆயினும், விரோதிகளிடத்திலும், தம்மைக் கொல்ல

வந்தோரிடத்திலுங்கூட அவர் மிக அன்புடனும் இரக்கத்துடனுமே நடந்து வந்தார். ஒருநாள் அவர் போர்க் காலத்தில் தனியாய் ஒரு மரத்தடியில் உலாவிக் கொண்டிருந்தார். அதைக் கண்ணுற்ற தஉதூர் என்னும் காபிர் ஒருவன் அவரைக் கொல்ல அதுவே நல்ல சமயம் என நினைத்து, அவரை யணுகி, தனது வாளை யுருவி 'ஓ முஹம்மத்! இப்பொழுது உம்மை யார் காப்பாற்றுவார்?' எனக் கேட்டான். நபிகள் அப்பொழுதும் சிறிதும் மனங் கலங்காமல் அன்பு ததும்பும் சாந்தத்துடன் அவனை நோக்கி 'உலகைக் காப்பவன் எவனோ அவனே என்னையும் காப்பான்' என விடை பகர்ந்தார். அச்சமயம் அவன் கையிலிருந்த ஆயுதம் நழுவிற்று. உடனே நபிகள் அதைத் தம் கையி லெடுத்துக் கொண்டு 'ஏ தஉதூர்! இப்பொழுது உன்னை யார் காப்பாற்றுவார்?' என்று கேட்க, அவன் மெய்விதிர்த்து வாய்குளறி 'தாங்களே எனக்கு உயிர்ப் பிச்சை யளிக்கவேண்டும்' என இரந்தான். அதற்கு நபிகள் 'இதோ மன்னித்தேன். இரக்கமென்பதை என்னிடம் கற்றுக் கொள்' என்றார். அவனும் முஸ்லீமாகி, நபிகளுக்கு ஓர் அரிய தோழனுமாயினன். இங்ஙனம் பல இடங்களிலும் தம் எதிரிகளை மன்னித்தும், அவர்கள்பால் இரக்கங்காட்டியும் யாவரையும் தம் வசப்படுத்தித் தாம் போதித்த தீனுல் இஸ்லாத்தைப் பரவச் செய்தார். ஒரு துளி இரத்தமும் சிந்தாமல் மக்கா நகரமும் நபிகளின் ஆளுகைக் குட்பட்டது. கொஞ்ச காலத்தில் இம்மதம் அரேபியா முழுதும் பரவியது.

தேச முழுதும் தீனுல் இஸ்லாத்தை ஏற்று யாவரும் முஸ்லீம்களான பிறகு, நாட்டைச் செம்மையாக்கும் பொருட்டு தேசத்தைப் பல மாகாணங்களாகப் பிரித்து ஆட்சியைச் சீர்திருத்தினர். நாட்கள் செல்லச் செல்ல வேலையின் மிகுதியாலும், மூப்பாலும் அவருடைய உடல் வன்மை குன்றி வந்தது. கடையில் ஹிஜ்ரி 11-ஆம் வருடத்தில் ஈசுவரனைப் பஜித்துக் கொண்டிருக்கும் பொழுது, அவர் தம் ஆவி பிரிந்து பரமபதம் அடைந்தது.

நபி பெருமான் மக்கட் சமுதாயத்திற்குச் செய்த பெரும் சேவையையும், அவர் பெருமைமையும் நாம் ஒருவாறு அறிய வேண்டுமானால், அவர் தோன்றுவதற்கு முன் அரேபியா தேசம் இருந்த நிலைமையையும் அவர் முயற்சியினாலும் சேவையினாலும் அத்தேசத்தார் பின்னர் அடைந்த உன்னத நிலையையும் நாம் அறிதல் வேண்டும். நபிகள் தோன்றுமுன் அரேபியர்கள் அநாகரிகர்களாயும், அநேக தீயபழக்கங்கள் உடையவர்களாயும் இருந்தனர். ஓயாமல் ஒருவருக்கொருவர்

சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். பழிக்குப் பழி வாங்குவதே அவர்கள் முக்கிய குணமாயிருந்தது. ஒருவன் கொல்லப்பட்டால் அவனுடைய உறவினர் அதற்காக இரத்தப் பழி வாங்க வேண்டும் என்றும், கொலையுண்டவனுக்கு ஈடாகப் பழி வாங்காவிடில் அவனுடைய கபாலம் வெடித்து, அங்கிருந்து சிறகுள்ள வண்டு ஒன்று வெளிப்பட்டு, 'எனக்குத் தாக சாந்தி செய்யுங்கள், எனக்குத் தாக சாந்தி செய்யுங்கள்' என்று கத்துவதாகவும், கொலை செய்தவனுடைய இரத்தத்தைக் குடித்த பின்னரே அவ்வுயிர் சாந்தியடையுமென்றும் அவர்கள் நம்பி இருந்தார்கள். பல விக்கிரகங்களை ஆராதித்து அவற்றிற்கு ஆண் குழந்தைகளைப் பலியிட்டுக் கொண்டுமிருந்தார்கள். சிலர் பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்துக் கொண்டிருந்தனர். கள்ளுண்ணுங் கொடிய பழக்கமும் அவர்களிடம் மிகுதியாக விருந்தது. ஒவ்வொருவனும் தன் விருப்பம் போல் பல பெண்களை மணந்து கொண்டு அவர்களை மிகக் கேவலமாக நடத்தி வந்தான். இத்தகைய தீய வழக்கங்கள் நிறைந்த நாடு நபிகளுக்குப்பின் மிகப் பிரசித்தி பெற்ற நாடாக மாறியது.

தேசத்தார் யாவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு நபியவர்களே ஆட்சியின் தலைமை வகித்திருந்தார். நாடு முழுவதும் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு அதிகாரி அனுப்பப்பட்டார். அவ்வதிகாரிகள் தத்தம் மாகாணங்களைச் சட்டப்படி ஆட்சி செய்ய வேண்டுமெனத் திட்டம் செய்யப்பட்டது. சட்டத்தை மீறி நடந்தவர்கள் தண்டனைக் குள்ளானார்கள். சட்டப்படி ஆளும் முறை வரவே பழிக்குப்பழி வாங்கும் குணம் அவர்களை விட்டு நீங்கிற்று. எல்லாரும் ஈசுவரனுடைய புத்திரராதலால் யாவரும் சகோதரர்கள் என்பதே இஸ்லாத்தின் முக்கிய கொள்கையாதலின், இஸ்லாத்தை ஏற்று முஸ்லீமான யாவருள்ளும் ஒரு புத்துணர்ச்சியும், ஒற்றுமையும் பிறந்தது. எல்லாரையும் கருணையுடனும் அன்புடனும் நடத்தத் தொடங்கினர். நரபலியிடுவதையும் உயிருடன் குழந்தைகளைப் புதைப்பதையும் அறவே விடுத்து உலகிலுள்ள எல்லாச் சகோதர சகோதரிகளுக்கும் அன்புடன் சேவை செய்து அவர்களுடைய அல்லல்களை அகற்றுவதே உயர் வாழ்வென நபிகளின் சீரிய வாழ்வினின்றும் உணர்ந்தனர். முகம்மதுவின் தீன் இஸ்லாமே அரேபியாவை தெய்வீக நாடாகத் திகழச் செய்தது!

AVINASHILINGAM INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION FOR WOMEN (DEEMED UNIVERSITY) CBE.
74824
LIBRARY
ADU LIB
74824

# ரபேயா

ரபேயா என்னும் மாதரசி ஆசியா மைனர் என்னும் தேசத்தவர்; மகம்மதிய மதத்தைச் சேர்ந்தவர். அல்லாவின் திருவருளை வழிபட்டுத் தீவிர அனுபூதியடைந்த பெரியார்களில் ரபேயாவும் ஒருவர். பஸ்ரா (Basra) என்னும் நகரத்தில் மிக எளிய குடும்பத்தில் அவர் பிறந்தார். ஒரு சமயம் அங்கு ஏற்பட்ட பஞ்சத்தின் கொடுமையைப் பொறுக்க மாட்டாமல் ரபேயாவை அவரது தாய் தந்தையர் சில பொற்காசுகளுக்காக ஒருவரிடம் விற்றுச் சென்றனர். விலைக்கு வாங்கிச் சென்ற எஜமானன் அவருக்குப் பல கொடுமைகள் இழைத்து வந்தான். அன்பு, இரக்கம் முதலிய நற்குணங்கள் ஒரு சிறிதும் இல்லாத கல்நெஞ்சன். அவன் ரபேயாவின் உடல் நிலையையும், வலிமைக் குறைவையும் பொருட்படுத்தாது மிகக் கடினமான வேலைகளைச் செய்யும்படி ஏவி வந்தான். ரபேயாவோ, 'இது ஆண்டவனிட்ட கட்டளையே' என நினைத்து, அவன் திருவடியே கதியெனத் தேறி, நாள்தோறும் பகவானைத் தொழுது, எஜமானனிட்ட கருமங்கள் யாவற்றையும் பொறுமையுடனும் பணிவுடனும் செய்து கொண்டு வந்தார். கடின வேலைகளால் துன்பங்கள் அதிகமேற்பட்ட பொழுதும் அரனடியை மறவாமல், மனத்தளர்வு இன்றி, சிரத்தையுடனும் பக்தியுடனும் வாழ்ந்து வந்தார்; ஒரு நாள் தீயவன் ஒருவன் பார்வையிலிருந்து விலக எண்ணி அவசரமாய் நடக்க முயன்ருர். அப்போது கால் தவறி கீழே விழுந்து விட்டார். ஒரு கையில் பலமாக அடிபட்டு மணிக்கட்டின் நிலை தவறியது. எழமுடியவில்லை; தரையிலேயே படுத்துக்கொண்டு மிக்க வேதனைப்பட்டுக் கொண்டிருந்த நேரத்திலும் ரபேயாவின் பரிசுத்தமான இதயம், உடல் துன்பத்தினிடம் செல்லாது, திருவருளையே நாடிச்சென்றது. "பிரபுவே!

நானோ அடிமை; திக்கற்றவள்; உன்னைத் தவிர வேறு ஆதரவு இல்லாதவள்; சுயேச்சையும் சுதந்திரமும் அற்றவள். என் மணிக்கட்டு அடியுண்டு மிகுந்த வேதனை தருகின்றது. ஆனால், இவையொன்றும் என் மனத்தைப் பாதிக்கவில்லை. ஒரே ஒரு எண்ணம்தான் என்னை இரவும் பகலும் துன்புறுத்துகின்றது; நின் திருவாக்கைப் பின்பற்றி, என்வாழ்க்கையைச் சீர்திருத்தி வாழ்கின்றேனோ, இல்லையோ என்னும் ஐயமே என்னைத் துன்புறுத்துகிறது'' என்று பிரார்த்தித்தார்.

அயலானுக்கு ஆட்பட்டு அடிமையாக இருந்ததனால் ஆண்டவனுக்குத் தொண்டுகள் பல செய்ய இயலாமற் போனதை நினைந்து நினைந்துத் துக்கப்பட்டார். ஓர் இரவு அதே நினைவில் மூழ்கி ஆருத்துயரடைந்தார்; வாழ்நாள் முழுவதும் ஆண்டவன் திருத் தொண்டுகளிலேயே கழிக்க முடியாதிருந்ததை எண்ணி விம்மி விம்மி அழத் தொடங்கினார்; தான் இருக்கும் இடத்தையும், சொல்லும் வார்த்தைகளை பிறர் கேட்பார்களே என்பதையும் மறந்தார். பகவானை நோக்கி, ''ஓ ஈசுவரா! ஏன் என்னை இப்பந்தத்தில் இருத்தித் துன் புறுத்துகிறாய்? எனக்கெனச் சுதந்திரம் மாத்திரம் அளிப்பாயானால் ஒவ்வொரு நிமிடமும் நின் சேவையிலேயே ஈடுபட்டிருப்பேன்''. இது போன்று பலவாறு கூறி ஆண்டவனிடம் புலம்பினார். அதே நேரம் சந்தர்ப்பவசமாகக் கண்விழித்துக்கொண்டிருந்த எஜமானன், ரபேயா வின் புலம்பலைக் கேட்டு, உண்மை நிலையை நன்கு உணர்ந்தான்; அவரைக் கடுமையாகத் தான் நடத்தியதற்காக வெட்கி, வேதனை யுற்று அன்றே விடுவித்தான்; எங்கும் போகவர - சுதந்திரமாக இயங்க அனுமதித்தனன். இப்படி விடுவிக்கப்பட்டதற்கும் இறைவன் திருவருளே காரணமெனத் தேர்ந்தார். ரபேயா ஆயுள் முழுவதும் அவன் திருப்பணிகளைச் செய்வதிலேயே தம்வாழ்நாளைக் கழிக்க எண்ணினார்; ஆண்டவன் திருவடியை நினைந்தும், பணிந்தும், போற்றியும், புகழ்ந்தும் வந்தார். மெக்கா, மெதீனா முதலிய புண்ணிய தலங்களைத் தரிசித்து வந்தார்; ஒரு நொடியும் வீணாக்காமல், ஈசுவர சிந்தையிலேயே மனத்தைச் செலுத்தி வந்தார். இரவு முழுவதும் தியானத்திலாழ்ந்திருப்பார்; சிறிது நேரமே உறங்குவார். அப்படி உறங்கி எழும்போதும், ''மனமே! எத்தனை நேரம் உறங்குவாய்? உறங்கி, உறங்கி யாது கண்டாய்? இப்படியே வாழ்நாளை வீணாளாக்க நினைந்தாயோ? எழவொண்ணாத் தூக்கத்தில் விழும் காலம் ஒவ்வொரு நிமிடமாக நெருங்கி வருகிறது. ஆதலால், இச்சமயம் துயில் விட்டெழுந்து, இம்மையிலும் மறுமையிலும் பயன்படக்கூடிய கருத்துக் களில் சிந்தனையைச் செலுத்து'' எனக் கதறுவார்.

இங்ஙனம் நாள்தோறும் ஈசுவர பக்தி நிறைந்து, யான் எனது என்பனவற்று, எல்லாப் பந்தபாசங்களேயும் அறுத்து யாவும் அவனுடைய அருளே எனப் போற்றிவாழ்ந்தார். உணவு உடை முதலிய இந்த உலக — உடல் தேவைகளைப் பொருட்படுத்தாமல், அவற்றைப் பற்றிய சிந்தனையை அறவேயகற்றி, பகவானுடைய திருநாமங்களை ஜபிப்பதிலும், அவனுடைய பெருமைகளைப் பற்றி நினைப்பதிலும். அவனது சர்வபரிபூரணத்துவத்தை வியந்து பாடுவதிலுமே அவரது வாழ்வு நிறைவுற்றது. எவ்விதமான துன்பங்கள் நேரிட்ட போதிலும், தன் நிலை கலங்காது, பகவானிடத்திலேயே முழு மனத்தையும் செலுத்தி வந்தார். அவரைப் பற்றிக் கேள்வியுற்ற பெரியார் சிலர் ஒரு நாள் அவரைப் பார்க்க வந்திருந்தனர். அவருடைய உடம்பின் மிக்க கேவலமான நிலையைக் கண்டு வருந்தி ''அம்மா! நின் துன்பம் நீங்கும் வண்ணம் பகவானைப் பிரார்த்தனை செய்லாகாதா?'' என்று வினவினர். அம்மையார் ''இத்துன்பங்களை உண்டாக்கியவன் யார்?'' என்று கேட்க, அவர்கள் ''பகவான் தான் இதற்குக் காரனம்'' என்றனர். அதற்கு ரபேயா ''அவனது விருப்பத்தாலேயே இவை ஏற்பட்டனவென்ருல், எப்படி அதற்கு மாருக அவற்றைப் போக்கும்படி பிரார்த்தனை செய்வது?'' என்ருர். இதைக் கேட்ட யாவரும் இவருடைய பக்தியின் உன்னத நிலையை யறிந்து, வியந்து போற்றினர். உலகியலில் எள்ளளவும் மனத்தைச் செலுத்தாது, பல நாட்கள்— வாரங்கள்—மாதங்கள் வரையிலும்கூடத் தன் இல்லத்தை விட்டு வெளி வராது, ஆத்ம சாதனைகளைச் செய்து வந்தார். ஒருமுறை வெகுநாட்களாக வெளியே வராமல் வீட்டுக்குள்ளேயே இருந்து வந்த அவரை நோக்கி ஒருவன் ''தாயே! வீட்டைவிட்டு வெளிவந்து உலகின் இயற்கையழகைப் பாருங்கள்! எத்துணை வியப்பாகவும் அழகாகவும் கம்பீரமாகவும் இருக்கின்றது. பகவானுடைய பெருமையை எவ்வளவு தெளிவாக விளக்கிக் காட்டுகின்றது!'' என்ருன். அதற்கு ரபேயா, ''உனக்குள்ளேயே உற்றுப் பார், அங்கு இன்னும் அதிகமான, இன்பமும் அழகும் பொருந்திய அரும்பெரும் விஷயங்களைக் காண்பாய்! அவை வெளிஉலகைவிட மிகஅதிகமாய்ப் பகவானுடைய பெருமையை விளங்கச் செய்யும்'' என்ருர்.

உணவின்றி, உறக்கம் இன்றி அவர் பல விரதங்களைக் கைக்கொண்டு வந்தார். ஒரு சமயம் ஏழு நாட்கள் பகவத் தியானம் செய்து கொண்டிருந்தார். அவ்வேழு நாட்களுக்குப் பின் உடம்பு மிகவும் மெலிந்து இருப்பதைக் கண்டு, விரதத்தை விடுத்து உணவருந்த எண்ணினுர். அவர் விளக்கேற்றப் போயிருந்த சமயம் ஒரு பூனை

வந்து, உண்ண வைத்திருந்த பண்டத்தைத் தின்றுவிட்டது. பிறகு கொஞ்சம் நீராவது அருந்த எண்ணினர். ஆனல் விளக்கு அணைந்து போயிற்று. இதனல் மிகவும் வருத்தமுற்று பகவானை நோக்கி, ''ஈசுவரா! ஏன் என்னை இத்துன்பங்களுக்கு ஆளாக்குகிருய். இவற்றை அனுபவிக்க நான் என்ன பாவம் செய்தேன்'' என முறையிட்டார். அப்போது ஓர் அசரீரி 'ஓ ரபேயா! உனக்கு இவ்வுலகம் முழுமையும் வேண்டுமானல் கொடுக்கிறேன்; ஆனல், அதன் பயனக, என்னிடம் கொண்டிருக்கும் பேரன்பையும் பக்தியையும் நீ இழந்துவிடுவாய். ஈசுவர பக்தியும், உலகப் பற்றுதலும் ஒன்ருேடொன்று இயைந்து ஒருக்காலும் இருக்க இயலாதென்பதை உறுதியாக உணர்வாயாக!' என்று சொல்லக் கேட்டார். அன்று முதல், தன்னையறியாமலே பாசங்கள் முழுமையும் நீங்கப்பெற்று உள்ளம் முழுமையும் ஈசுவர பக்தியே நிறையும்படி பகவத் சிந்தனை செய்து வந்தார். அப்பொழுது அவர் இறைவனை வேண்டிக்கொண்டதாவது: ''பகவானே! எந் நேரத்திலும் எவ்விடத்திலும் நீயே என் மனத்தை ஆட்கொள்ள வேண்டும். வேறு எந்த எண்ணமும் மனத்தில் வரக்கூடாது. உன் எண்ணத்தாலேயே என் இதயத்தை நிறைவுச்செய்க!''

ஒரு நாள் தனவந்தன் ஒருவன் ஒரு பையில் பொன் நாணயங்களை நிரப்பிக் கொண்டு, அவற்றை ரபேயாவுக்குப் பரிசாக கொடுக்கக் எண்ணி, அவர் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தான். இதைப் பார்த்து அங்கிருந்தோர் வீட்டினுள்ளே போய் ரபேயாவிடம் சொல்ல அவர் ''அப்பா! கடவுள் நாள்தோறும் எனக்கு வேண்டிய பொருள்களைக் கொடுக்கின்ருர். அவனைவிட வேறு ஒரு கதி நமக்குத் தேவையில்லை. அவனருள் நமக்கிருக்க இப்பொற்காசுகள் யாது பயன்தரக் கூடும்? மேலும், இப்பணம் நல்வழியில் தான் வந்ததா அல்லது தீய வழியில் வந்ததா என்பதை நாம் அறியோம். எனவே, நான் ஏன் இதை வாங்கிக் கொள்ள வேண்டும்?'' என்ருர். இதைக் கேட்ட அத் தனவந்தன் மிகத் துயருற்றுத் தன்வழிச் சென்ருன். ஒரு நாள் ஹசன் பஸ்ரி என்னும் சாது அவரை நோக்கி ''அம்மா, மணந்து கொள்ள வேண்டும் என்னும் எண்ணமே உங்கள் மனத்தில் தோன்றவில்லையா?'' எனக் கேட்டார். அதற்கவர் சுகபோகத்தை நாடுபவரே மணத்தை நாடுவர். 'நான்' 'எனது' என்னும் எண்ணமுள்ளோரே உடல் இன்பத்தை தேடுவார்கள்; அந்நினைவுள்ளவர்கள்தான் மணத்தை விரும்ப முடியும். நானே யாவையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்து விட்டேன். 'எனது' என்பது கொஞ்சமேனும் இல்லை; யாவும் அவனு டைமைகள். அப்படியிருக்க யான் எப்படி மணக்க முடியும்?'' என்ருர்.

பஸ்ராவில் நூல்கள் மிகக் கற்றுணர்ந்த பண்டிதர் ஒருவர் ரபேயாவைப் பார்க்க வந்திருந்தார். அப்பொழுது அவர் மனித இயல்பு களின் குற்றங்களைப் பற்றியும் சம்சார வாழ்க்கையிலுள்ள இச்சைகளைப் பற்றியும் அவற்றால் உண்டாகும் பந்தங்கள் பற்றியும், விளக்கமாகவும் அதிகமாகவும் பேசிக் கொண்டிருந்தார். அதைக் கேட்டு ரபேயா, ''உமக்கு உலகப்பற்று அதிகமாக இருப்பதுபோல் தோன்றுகிறது! நமக்கு விருப்பமில்லாத விஷயங்களைப் பற்றி நாம் அதிகமாய்ப் பேச மாட்டோம். நீர் இவ்வுலக வாழ்க்கையைப் பற்றி இவ்வளவு அதிககமாய்ப் பேசுவதைக் கவனித்தால், உமக்கு இவ்வாழ்க்கையில் அதிக விருப்பம் உண்டென்றே சொல்லலாம்'' என்றார். மற்றொரு நாள் மகம்மதிய நாடுகளில் பெரியோர் எனச் சிறப்புற்ற மூவர் ரபேயாவிடம் உரையாடிக் கொண்டிருந்தனர். அச்சமயம், 'உண்மையான ஈசுவர பக்தியென்பது யாது' என்னும் கேள்வி பிறந்தது. ஒவ்வொருவரும் தத்தம் அறிவுக் கேற்றபடி விடையிறுத்தனர். 'எவனொருவன் தனக்கு வரும் கஷ்ட நஷ்டங்களைச் சாந்தத்துடனும் தைரியத்துடனும் அனுபவிக்கவில்லையோ, அவன் உண்மையான ஈசுவர பக்தியுடையவ னாக மாட்டான்' என்றார் ஒருவர். இதைக் கேட்ட ரபேயா 'இது கர்வத்தைக் காட்டுகின்றது' என்றார். மற்றொருவர் 'தனக்கு வந்த அல்லல்கள் யாவும் தனது முன்னேற்றத்திற்காகக் கடவுளால் கொடுக் கப்பட்டவையென நினைத்து, அவற்றிற்காகக் கடவுளுக்கு நன்றி கூறாதவன் உண்மை பக்தியுடையவனாக மாட்டான்' என்றார். இன்னு மொருவர் 'தனக்கு வரும் துன்பங்ளெல்லாம் திருவருளால் ஏற்பட்டவையென நினைத்து மகிழாதவன் உண்மை பக்திமானாக மாட்டான்' என்றார். அவர்கள் சொன்னவை யாவும் அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்த ரபேயா, அதைவிட மேலான பக்தியுமுண் டென்றார். அது யாதென அவர்கள் வினவ, அவர், ''பக்தியின் மேலீட்டினால் தன்னையும் தன்னை நோகச் செய்யும் அல்லல்களையும் மறந்து, பகவானிடத்தே தன் முழுமனத்தையும் செலுத்தி, அதனால் 'நான்' 'எனது' என்பனவற்று நிலைத்திருப்பவனே உண்மையான ஈசுவர பக்தியுடையவனாவான்'' என்றுரைத்தார். இதைக் கேட்ட அவர்கள் யாவரும் ரபேயாவின் முதிர்ந்த ஞானத்தையும் உயர்ந்த பக்தியையும் கண்டு வியந்து போற்றினர்.

இவ்வண்ணம் கனிந்த ஈசுவர பக்தியும், பேரன்பும் உடையவராகி, அதனால் வரும் பேரின்பமும் அடைந்து யாவராலும் போற்றப்பட்டு, சில காலம் ரபேயா வாழ்ந்திருந்தார். எங்கெங்கு சென்ற போதிலும் இச்சான்றோர் வாழ்க்கை ஒரு சுடர் விட்டெரியும் விளக்குப் போலத்

தோன்றி, மானிடர் யாவருடைய வாழ்க்கைக்கும் ஓர் இலக்கியமாக விளங்கிற்று. ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் அறவே யொழித்து, உடலின்பங்களையும் தேவைகளையும் அணுவள வேனும் கவனியாது, பிறருக்கு நன்மை செய்வதிலும், பகவானின் திருத்தொண்டுகள் செய்வதிலுமே, அவர் வாழ்நாளைக் கழித்தார். இறந்த பொழுதும் அவர் மனம் ஈசுவரனை விட்டகலாது அவனது திரு முகத்தை நாடியே சென்றது. உயிர் போகும் தருணத்தில் அவர் ''ஈசா! நான் நரகத்திற்குப் பயந்து உன்னை வழிபட்டிருந்தேனானால் என்னை நரகத்திலேயே சேர். சுவர்க்கத்தையடைய எண்ணி உன்னைத் தொழு திருந்தேனானால் நான் சுவர்க்கம் சேரவொட்டாமல் தடு; எனதன்பே! உன்னை நாடியே எனதன்பு முழுமையும் செலுத்தியிருந்தேனானால், எனக்கு உனது தூய பொற்பாத கமலங்களையும், தூய திருமுகத்தையும் வதனத்தையும் காட்டி அருள்புரிவாயாக!'' என்று கூறினார். ரபேயாவின் அத்தகைய பிரார்த்தனையே நம்முடையதும் ஆகுக.

# பயாசித் பந்தாமி

பள்ளிக்குப் போயிருந்த ஏழு அல்லது எட்டு வயதுச் சிறுவன் வெகு சீக்கிரத்திலேயே அன்று வீட்டுக்குத் திரும்பி வந்தான். வந்ததும் தன் தாயின் காலைக் கட்டிக்கொண்டான். தன் மதலைமொழியால், ''அம்மா! ஆசிரியர் எங்களுக்கு ஒரு புதுப்பாடம் திருக்குரானிலிருந்து கற்பித்தார். ஒவ்வொருவரும் பகவானை முழுமனத்துடனும் பக்தியுடனும் வழிபட வேண்டுமென்றும், பெற்றோரைப் பேரன்புடனும், பணிவுடனும் வணங்கவேண்டுமென்றும் அதில் கூறப்பட்டிருக்கிறது. அது எங்ஙனம் இயலும்? ஒருவருக்குச் சேவை செய்யும் சமயம் மற்றொருவர்க்குப் பணி செல்வது இயலாதன்றோ? பகவானுக்குச் சேவை செய்வதற்கென உடலைத் தத்தம் செய்துவிட்டால், தங்களுக்கு பணியாற்ற இயலாது. தங்களுக்குச் சேவை செய்வதென தீர்மானித்தால் ஈசுவராராதனை இயலாது. ஆதலால், நம் யாவருக்கும் கர்த்தாவான விசுவேசுவரனுக்குப் பணியாற்றும் பொருட்டு, தங்களுக்குப் பணி செய்வதினின்றும் தாங்கள் என்னை விடுவிப்பீர்களாக! அப்பொழுது தான் உலகநாதனுக்கு முழுமனத்துடன் சேவை செய்ய இயலும்'' என்றான்.

அருமை மைத்தனின் உரையை அன்னை கேட்டனள். அவள் மனத்தில் இருவிதமான உணர்ச்சிகள் போராடின. தன் அருமை மகனின் மனத்தில் இம்மேன்மையான எண்ணம் தோன்றியதை நினைத்து மனம் பூரித்தாள். தன்னிலும் பாக்கியசாலி இல்லையென இறுமாந்தாள். எனினும் தன் கண்ணின் மணியாக தன்னுயிருக்கு உயிராக விளங்கும் புதல்வனைப் பிரிய நேருமேயென்ற எண்ணம் அவளை வருத்தியது. எனினும் ஈசனுடைய அருட்பிரசாதத்தைப் பெறுவதே இவ்வுலகிலுள்ள

யாவற்றிலும் தலைசிறந்ததெனத் தேர்ந்தாள். ஆதலால் தன் பிள்ளையை உச்சிமோந்து, ஆசி கூறி, ஈசனுக்கே என்றும் இடைவிடாது சேவை செய்யும்படி உத்தரவிட்டுத் தன் செல்வனைப் பிரிந்தாள் அன்னை! அவள் பெற்றருளிய அருமை மகனே பயாசித் பந்தாமி.

இவ்வாறு தாயிடம் விடைபெற்று வெளிப்போந்த பயாசித் சுமார் 30 வருடங்கள் கடுந்தவம் செய்து வந்தார். கடைசியில் தம் தாயைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பம் அவர் மனத்தில் தோன்றியது. எனவே, தம் தாய் இருக்கும் இல்லத்தை நோக்கி வந்தார். தாயோ தம் புதல்வனைப் பிரிந்த நாள் முதல் ஈசுவரனையே என்றும் மறவாமல் சிந்தித்து தன் அருமைப்புதல்வனுக்கு அருள்புரியும்படி அனுதினமும் பிரார்த்தித்து வந்தாள். பயாசித் அன்னையைப் பார்க்கச் சென்ற சமயம் வீட்டுக் கதவு தாளிடப்பட்டிருப்பது கண்டு வெளித் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். அச்சமயம், 'எவரெவர்க்கும் அவரவர் கேட்ட வண்ணம் வரமளிக்கும் வரதா! எனதருமந்த மைந்தனுக்கு அனுக்கிரகம் செய்வாயாக!' என்று தனக்காக ஈன்றாள் வாய்விட்டு இரங்கும் பிரார்த்தனையை அவர் செவியுற்றார். முப்பது வருடங்கள் கழித்தும் தம்மை மறவாதிருந்த தம் அன்னையின் மாறாப் பேரன்பை நினைத்துக் கண்ணீர் சொரிந்தார். பிறகு மெல்லக் கதவைத் தட்டினார். கதவைத் திறந்ததும் தாயும், பிள்ளையும் ஒருவரை ஒருவர் தழுவி ஆனந்தத்தில் மூழ்கியிருந்தனர். தம் தாயின் மாறாவன்பு அவரைத் தம் ஆயுள் முழுமையும் தம் தாய்க்குச் சேவை செய்வதிலேயே செலுத்தும்படி அவரைத் தூண்டியது. தாயின் முதுமைக் காலத்தில் அவளுக்குப் பணி செய்வதே தம் கடமையெனக் கொண்டார். அன்று முதல் அல்லும் பகலும் அன்னைக்குப் பலவிதமான பணிவிடைகளைச் செய்வதிலேயே தம் சிந்தையைச் செலுத்தினார். தாயைப் பேணுவதே தம் முக்கிய கருமமெனவும், தம் அன்னையே தமக்குக் கண்கண்ட தெய்வமெனவும் நினைத்து, எந்தவிதமான சிரமங்களையும் ஒரு சிறிதும் பொருட்படுத்தாது தாயின் சுகத்தையே பேணி வந்தார். இங்ஙனம் பல வருடங்கள் சேவை செய்து வந்ததால் அவர் அடைந்த இன்பம் எல்லையற்றதாயிற்று. இங்ஙனம் தாய்க்குப் பணியாற்றி அதன் பயனைத் தாம் அதுவரை அடையாத பேரின்ப அனுபவத்தையும் பெற்றார். ஊரை விடுத்துக் கானகம் புகுந்து உணவைக் குறைத்துச் செய்யும் சாதனங்கள் பலவற்றையும் விட 'அன்னையும பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற முதுமொழிக் கிணங்க அவர்களுக்குத் தம் முழுமனத்துடனும் ஆழ்ந்த அன்புடனும் பணி செய்வதே பெரிய சாதனையென அவர் பலகாலும் உணர்ந்தார். உணர்ந்ததை உபதேசித்தார்.

அன்னை இறந்த பிறகு, தாய்க்கு மைந்தன் செய்யவேண்டிய கடமைகள் யாவும் செய்து முடித்த பின்னர், பலவிதமான கடின சாதனங்களைப் பின்பற்றி வந்தார். இறைவனின் திருவருட் பிரசாதத்தைப் பெறுவதற்கு வேண்டிய உபாயங்கள் அத்தனையுஞ் செய்தார். விஷய சுகங்களை விஷமெனக் கருதி அவற்றை விடுத்தார். உலகப் பொருட்கள் தம் மனத்தை இழுப்பதால் இவ்வுலகத்தினிடை தமக்குப் பந்தம் ஏற்படுகின்றது என்றறிந்து அவை யாவற்றையும் அகற்றினர். உடுத்த துணியும், பிச்சைக்கு ஒரு பாத்திரமும் தவிர மற்றென்று மில்லாமல் தேச முழுவதும் பயணம் செய்து வந்தார். தீர்த்தங்கள் தோறும் சென்று ஈசுவர தரிசனத்துக்காகப் பெரிதும் முயற்சி செய்தார். ஈசனுடைய திருவருளை நாடி நாடிப் பல நாளும் கண்ணீர் சொரிவார். ஈசனருள் தமக்குக் கிடைக்குவோவெனத் தவிப்பார். ஒருநாள் இரவு ஒரு கனவு கண்டார். தாம் ஈசனுடைய திருச் சன்னிதானத்தில் நிற்ப தாகவும், ஒரு திரை மாத்திரம் அவர் திருவதனத்தை மறைத்துக் கொண்டிருப்பதாகவும் அவருக்குத் தோன்றியது. அக்கனவின் பிறகு பகவானின் திருமுகத்தைப் பார்க்கப் பதைபதைத்துப் பயாசித் 'பகவானே கருணை கூர்ந்து உம் திருவதனத்தை அடியேன் பார்க்குமாறு என்னை உமது முன்னிலையில் அனுமதிக்க மாட்டீரா?' என இறைஞ்சினர். அதற்கு மறுமொழியாக ஒரு அசரீரி வாக்கு உண்டாயிற்று. 'ஏ பயாசீத், நீ மற்றவை எல்லாவற்றையும் துறந்தபோதிலும் உன்னுடைய பழைய உடையின் பேரிலும், பிச்சைப் பாத்திரத்தின் பேரிலும் பற்று வைத்திருக்கிறாய். அப்பற்றுக்களை நீக்குவாயாக; அங்ஙனம் செய்தால் ஈசன் முன்னிலையில் வரத்தகுதியுடையவனாவாய்' என்ற மறுமொழியைக் கேட்டதும் தம் அங்கியையும் பாத்திரத்தையும் உடனே கழற்றி எறிந்தார். அவைபால் தாம் வைத்திருந்த பற்றுதலும் கழன்றது. ஈசுவரக் கிருபைக்குப் பாத்திரராயினர்! ஈசுவரக் கிருபை கிட்டிற்று.

அதன்பின் பல நாட்கள் பயாசித் வாழ்ந்து வந்தார். பகவத் கிருபை பெற்ற பெரியோர்களின் இலக்கணங்களைப் பற்றி அவர் பலகாலும் சொல்லுவார். கடல் போன்ற அருளும் இரவி போன்ற அன்பும், புவி போன்ற பொறுமையும் உடையாரே தெய்வத்தருள் பெற்றவரென அவர் மொழிவார். அத்துணை அருளும் அன்பும் அவரும் பெற்றவராய்த் திகழ்ந்தார். திருநாவுக்கரசர்,

"சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லாராகில்;"

எனத் திருவாய் மொழிந்ததற் கிணங்க இப்பெரியாரும் எட்டு சுவர்க்கங்களையும் அடைந்தனுவிப்பதைக் காட்டிலும் பகவத் நாமத்திலேயே பகவத் பக்தர்கள் ஆனந்தம் காண்பர் என உபதேசித்தார்.

இவருக்கு இறுதிக் காலம் நெருங்கிய பொழுது மசூதிக்குச் சென்று ஈசுவர ஸ்வரூபத்தில் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க, ''அன்னாய்! செய்த தவங்களுக்காக யாதொரு கைம்மாறும் நான் கேட்கவில்லை. யான் கைக்கொண்ட பல விரதங்களையும் செய்து வந்த பாராயணங்களையும் ஒரு பொருளாகக் கருதவில்லை. ஏனெனில் இவையாவும் உன் அருளாலேயே கிடைத்தவையன்றோ? நான் கடையனினும் கடையேன். 'என் கல்லாப் பிழையும், கருதாப் பிழையும், கசிந்துருகி நில்லாப் பிழையும்......எல்லாப் பிழையும் பொருத்தருள்வாய். எம் உயிர் நாதனே'' என்று சொல்லிக் கொண்டே உடலை நீத்துப் பரம பதம் அடைந்தார். பயாசித்தின் பற்றற்ற தன்மை நமக்கோர் படிப்பினையன்றோ!

# பூதயால் அடிகள்

பூதயால் அடிகள் தம் சிறு வயதில் பெருங் கள்வராயிருந்தவர்; யாவரும் அஞ்சும்படியான கொள்ளைக் கூட்டத்தாரின் தலைவராயிருந் தார். ஒரு நெடுவழிச்சாலைக் கருகிலுள்ள மலையடிவாரத்தில், பல கள்வர்களைத் திரட்டி அவர்களுக்குத் தலைமை வகித்து, அச்சாலையின் வழியே செல்லும் வியாபாரிகள் யாவரையும் கொள்ளையடித்துப் பொருள் சேகரிப்பதே அவர் தொழிலாயிருந்தது. இங்ஙனம் கொள்ளையடிப்பதில் பெருஞ் சாமர்த்தியமும், தீரமும் படைத்தவராதலால் அவர் பெயரைக் கேட்டமாத்திரத்தில் அந்நாடு முழுமையும் நடுங்கிற்று. அவ்வழியில் செல்லுவோர் அவருக்குப் பெரிதும் அஞ்சுவாராயினர்.

ஒரு சமயம், அவர் கூட்டத்தைச் சேர்ந்த கள்வர்கள் பலர், அப் பக்கம் சென்று கொண்டிருந்த வியாபாரிகள் சிலரை எதிர்த்து, வழி மறித்துக் கொள்ளையடிக்க முயன்றனர். அவ்வியாபாரிகளில் ஒருவன் அத்திருடர்களினின்றும் தப்பிக்க நினைத்து, தம் தோழரை விட்டு ஓடி, அங்குமிங்கும் அலைந்து, கடைசியில் ஒரு கூடாரத்தில் ஒருவர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, தன்னிடத்திலிருந்த பணப் பையை அவரிடம் கொடுத்து, அதைத் தனக்காகக் கொஞ்ச நேரம் வைத்திருக்கும்படி சொல்லிச் சென்றான். கள்வர்கள் கொள்ளையடித் துத் திரும்பிய பிறகு, அவ்வணிகன் தன்னுடைய பொருளை மீண்டும் பெறும் பொருட்டு அவவிடத்தை நோக்கிச் சென்றான். அங்கு கண்ட காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது. ஒரு புலியினின்றும் தப்பிக்க எண்ணி, அதன் வாய்க்குள்ளேயே ஓடினாற்போல் அவனுக்குத் தோன் றிற்று. தன் செல்வத்தைத் திருடரிடமிருந்து காப்பாற்ற எண்ணி, ஒரு கள்வன் வசமே அதைக் கொடுத்தது அவனைத் திடுக்கிடச் செய்தது,

ஏனெனில், அவன் தன் பணப்பையைக் கொடுத்து வைத்திருந்த இடத்தில் திருடர்கள் யாவரும் தாம் வழிப்பறி செய்த பொருள்களைப் பங்கிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான்; தம் பொருளை ஒரு திருடனிடம் கொடுத்ததைப் பற்றி வருந்தினுன்; மீண்டும் அவர்களால் துன்ப மடையாமலிருக்கும் பொருட்டு அவ்விடத்தை விட்டகல முயன்ருன். அவனுடைய மனக் கலக்கத்தையும், அவன் பயந்து திரும்புவதையும் கவனித்துக் கொண்டிருந்த பூதயால், அவனைக் கூவியழைத்து ''ஏன் திரும்பிப் போகிறீர்? உம்முடைய பணப்பை இதோ நீர் வைத்த இடத்திலேயே இருக்கிறது. எடுத்துச் செல்லும்'' என்ருர். வியாபாரியும் அச்சத்துடனும், வியப்புடனும் தம் பொருளை எடுத்தேகினுன். இதைக் கவனித்துக் கொண்டிருந்த மற்ருேர் அவரை ஆச்சரியத்துடன் நோக்க, அவர், ''இம் மனிதன் என்னை உண்மையுடன் நம்பி என்னிடம் தன்னுடைய பொருளைக் கொடுத்தான். இவ்வளவு நம்பிக்கை வைத்தவனை மோசஞ் செய்யலாகாது'' என உரைத்தார்.

நாள்தோறும் கொள்ளையடிப்பதும், அதில் வரும் பொருளைத் தம் கூட்டத்திலிருக்கும் மற்ற கள்வர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்து வாழ்வதும் அவருடைய அன்ருடத் தொழிலாக இருந்தது. எனினும் கடவுள்பாற் பக்தியும் அவருள்ளத்தில் மிகுந்திருந்தது. வெள்ளிக் கிழமை தோறும் அவர் தவருது தொழுது வந்தார். உலகத்தார் முன்னிலையில் நல்லோரெனப் பலர் தோன்றுகின்றனர். அவர்களை ஆஸ்திகர்களென நாம் கொண்டாடிய போதிலும், அவர்களுக்குக் கடவுள் மீது தீவிர பக்தியும், நம்பிக்கையும் இருப்பதில்லை. ஆனுல் இக் கள்வருள்ளத்தில் கடவுள் பக்தி நிறைந்திருந்தது. இறைவனைத் தொழும் போது மனங்கசிந்து திருவருளை நாடி நிற்பார். பலகாலும் தம்மை மன்னிக்கும்படி தம்பால் திருவருள் சுரந்து தம்மைக் காத்தருளும்படி இரப்பார்.

ஒரு நாள் தாம் காதலித்திருந்த ஒரு பெண்ணைப் பார்க்க வேண்டுமென்ற அவா அவருள்ளத்தில் தோன்றிற்று. அவர் தம் காதலி வீட்டை அடைந்து சுவரைத் தாண்டிக் குதிக்க அதன் மேல் ஏறினுர். அச்சமயம் எவரோ ஒருவன் குரான் படிப்பது அவர் காதில் விழுந்தது. வேத ஒலி கேட்கவே சுவர் ஏறுவதை நிறுத்தி, ஒலிவரும் திக்கை நோக்கி உற்றுக் கேட்டார். அவ்வொலி கம்பீரமாகவும் திருத்தமாகவும் அவர் காதில் கேட்டது. ''ஏ கடவுளிடத்தில் நம்பிக்கை யுள்ளவர்களே! இன்னும் உங்களுக்குக் கடவுளுடைய திருவடியைப் பேணுவதற்குக் காலம் வரவில்லையா?'' என்று கருணையுடன் அந்த

ஒலி அவர் செவியிற் புகுந்தது இது அவர் மனத்தைத் திடுக்கிடச் செய்தது. அவ்வார்த்தைகள் தம்மை நோக்கிச் சொல்லப் பட்டன போல் அவருக்குத் தோன்றிற்று. உடனே சுவரைவிட்டு இறங்கினர். ஈசன் திருப்பாதத்தை நாடும் நற்காலம் இன்னும் வரவில்லையே என ஏங்கினர். தம்மையறியாது நாட்கள் கழிகின்றனவே எனக் கதறினர். அதுவரை ஈசனை நாடாது சிற்றின்பங்களில் தம்மனத்தைச் செலுத்தியது பற்றி வருந்தினர். அன்றுமுதல் தம் வாழ்நாளை கடவுளருளை நாடுவதிலேயே கழிப்பதெனத் தீர்மானித்தார். அந்த நேரமே ஆத்மீக வாழ்விற்கு இன்றியமையாத துறவு பூண்டார் தம் உடைமை யாவும் விடுத்து தீய வழக்கங்களையும் அன்று முதல் அறவே ஒழித்து அல்லாவின் அருட் செல்வம் பெறுவதே மானிட வாழ்வில் உயர் இலட்சியமெனக் கொண்டார். முத்திநெறி புக்குத் தமக்குச் சன்மார்க்க நன்னெறி புகட்டவல்ல பெரியாரை நாடி, நபி பெருமானல் புனிதமாக்கப் பெற்ற மெக்கா மாநகரத்துக்கு விரைந்து சென்ருர்.

அங்கு அக்காலத்தில் மிகப் பிரசித்தி பெற்று விளங்கி வந்த அபூஹனிபா என்னும் பெரியாரை அடுத்து, அவர்க்குப் பல வருடங்கள் தொண்டு செய்து, பல நூல்களும் கற்று வந்தார். தம் காலம் அனைத்தையும் ஞானமும் பக்தியும் அளிக்கக் கூடிய திருப்பணிகளிலும் கடவுள் தியானத்திலுமே கழித்து வந்தார்.

இங்ஙனம் பல வருடங்களிருந்து, தூயராகி மறுபடியும் தம் ஊருக்குத் திரும்பினர். அவருடைய தூய்மையும் பற்றற்ற நிலையும் நாட்டு மக்கள் வழிபாட்டிற்கு உரியவாயின.

இவருடைய கீர்த்தி அந்நாட்டு அரசனுக்கும் எட்டியது. ஒரு நாள் அம்மன்னன் இப்பெரியாரைப் பார்க்கும் பொருட்டு, அவர் குடிலை நாடிச் சென்ருன். அச்சமயம் பூதயால் அடிகள் குரானைப் பாராயணம் செய்து கொண்டிருந்தார். அவர் பாராயணம் முடியும் வரைக் காத்திருந்து, அவர் அதை முடித்ததும் அவரை வணங்கித் தனக்கு ஏதாவது நல்லறிவு புகட்ட வேண்டுமென இரந்தான். அதற்கு அடிகள் ''ஏ அரசனே, நீ உன் உடலையும் அதன்கண் வைத்திருக்கும் கர்மேந்திரியங்களையும் மனத்தையும் அடக்கி ஆளுவையாகில், நீ ஓராயிரமாண்டு பல பெரிய மாகாணங்களடங்கிய இராஜ்யத்தை ஆளுவதைவிட மிகப் பெரிய பயனைப் பெறுவாய்" என அறிவுறுத்தினர். மேலும், ''அதிகாரம் வாய்ந்த பதவியை வகிப்பது பேரதிருஷ்டம் என நினைத்து, பலர் பேதைகள் அதைப் போற்றி நாடித் திரிகின்றனர். ஆனல்,

நான் அதை ஒரு பெருங் கேடென நினைக்கிறேன். இவற்றால் மதிமயங்கி இவ்வதிகாரங்களை வகிப்பவர்கள் தங்கள் புத்தி மழுங்கப் பெற்று, ஆசையெனும் சுழலில் அகப்பட்டு. ஈசன் திருவடிகளை மறந்து, சாந்தமும் மகிழ்ச்சியும் இன்றி, சில நாட்களிலிருந்து மாய்கின்றனர்'' என்றார்.

இவ்வார்த்தைகளைச் செவியுற்றுக் கேட்டுக் கொண்டிருந்த அவ்வரசனுக்கு அவர்பால் பேரன்பும் பெருமதிப்பும் உண்டாகியது. அன்னார்க்குத் தன்னாலியன்ற சேவைசெய்ய வேண்டுமென்ற விருப்பத்துடன் அச்செல்வன் சில ஆயிரம் பொன் நாணயங்கள் அடங்கிய ஒரு பையைக் கொடுத்து, அதை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டான். இதைக் கேட்டதும் அடிகளுக்கு அடங்காக் கோபம் உண்டாயிற்று. ''என்னே! என் வார்த்தைகள் யாவும் இங்ஙனம் வீண் போயினவா? நான் உன்னுடைய பாரத்தைக் குறைப்பதற்காக வழியைத் தேடிக் கொண்டிருக்க நீ என்னுடைய பாரத்தையும் பற்றுதலையும் அதிகப்படுத்த முயல்கின்றனையே! அது தகுமா?'' எனக் கடிந்தார். மன்னனும் வெட்கித் தலைகுனிந்தான்.

அரசன் அவன்பால் வைத்திருந்த நன்மதிப்பு முன்னிலும் பன்மடங்கு அதிகமாயிற்று. அவருடைய தியாக புத்தியும், தீவிர ஞானமும் அவனுடைய மனத்தை ஒருங்கே கவர்ந்தன. ஒரு நாள் அவருடைய தியாக புத்தியை வியந்து ''ஐயன்மீர்! தங்களுடைய துறவு எவ்வளவு மகத்தானது!'' எனப் பகர்ந்தான். அதற்கு அவர் ''என்னுடைய துறவைக் காட்டிலும் உன்னுடைய துறவே மேலானது'' என்றார். இதைக் கேட்ட அக்கோமான் அதன் உண்மைப் பொருள் விளங்காமல் விழிக்க, அவர் ''நான் கேவலம் இவ்வுலகத்தையும் அதன் அழியும் பொருட்களையும் துறந்து, என்றுமழியா நிலையான முத்தி நிலையை நாடுகிறவன். நீயோ அரசன் இவ்வுலக போகங்களில் முழுவதும் ஈடுபட்டவன். நான் துறந்ததைவிட நீர் துறந்ததே மேலான நிலையாதலின், நீயே என்னிலும் பெரிய துறவி'' என்றார்.

# இப்ரஹீம் பென் ஆடம்

கி.பி. ஒன்பதாம் நூற்ருண்டில் பால்க் நகரத்தில் இப்ரஹீம் பென் ஆடம் என்ற பெயர் வகித்த அரசர் ஒருவர் இருந்தார். ஒரு நாளிரவு அவர் உறங்கிக் கொண்டிருக்கும் சமயம் எவரோ தமது அறையின் கூரையின்மேல் நடமாடுவது போல் தோன்றிற்று. உடனே, 'ஐயா! ஏன் கூரை மீது நடக்கிறீர்கள்' என்று அவர் வினவ, ''எனது ஒட்டகம் காணுமற் போய் விட்டது! அதைத் தேடிக்கொண்டிருக்கிறேன்'' என்று மறுமொழி பிறந்தது. அதைக் கேட்டு வியப்புற்று, அவர், ''கட்டிடத்தின் முகட்டின்மேல் ஒட்டகத்தைத் தேடுபவன் பெரிய மூடனுயிருக்க வேண்டும்" என்ருர். அதற்கு ''ஓர் அரசனுக்குரிய ஆடம்பரங்களில் இருந்து கொண்டு ஈஸ்வரனை யடைய நினைப்பது இன்னும் எவ்வளவு மதியீனம்'' என்ற பதில் கிடைத்தது. இதைக் கேட்ட இப்ரஹீம் அன்றிரவு முழுதும் சிறிதேனும் உறக்கமின்றி இதன் பொருளைச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

பொழுது விடிந்தது. தம் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வழக்கமாய் வீற்றிருக்கும் கொலுமண்டபத்திற்குச் சென்ருர். மண்டபம் மற்ற நாட்கள் போல அமைச்சர்களாலும், நாட்டுச் சீமான்களாலும் நிறையப்பெற்றிருந்தது. இவர் தம் அரியாசனத்தில் அமர்ந்ததும், தாம் முன்பு எப்பொழுதும் பார்த்து அறியாத ஒருவர் மிகுந்த கம்பீரத் தோற்றத்துடன் கொலுமண்டபத்தில் நுழைவதைக் கண்டார்; அவரை நோக்கி, ''நீர் யார்? எதற்காக வந்துள்ளீர்'' என வினவினுர். கம்பீரமான தோற்றத்தையுடைய அவ்வுருவம், ''நான் ஒரு வழிப்போக்கன். இவ்விடுதியிலிருக்க விரும்புகிறேன்'' எனச் செப்பியது. அதற்கு அவர், ''இது வழிப்போக்கர்களுக்கு ஏற்பட்ட விடுதியல்ல.

இது எனது இல்லம்'' என்றார். ''உமக்கு முன் இங்கு யார் இருந்தார்கள்?'' என அவ்வுருவம் கேட்க அவர், ''எனக்கு முன் எனது தாய் தந்தையார் இருந்தனர்'' எனச் செப்பினார். ''அவர்களுக்கு முன் இவ்விடத்தில் வாழ்ந்தவர் யார்?'' என மீண்டும் அவர் கேட்க, ''அவர்களுக்கு முன் எனது பாட்டனார் முதலிய மூதாதைகள் இருந்தனர்'' என்றார். ''அவர்களெல்லாம் இப்பொழுது எங்கே?'' என்று மறுபடியும் அவ்வுருவம் கேட்க, அவர், ''அவர்கள் இறந்துவிட்டனர்'' என்ற பதிலிறுத்தார். ''இங்ஙனம் ஒருவருக்குப்பின் மற்றொருவர் வந்து தங்கிச் செல்லும் இவ்வீடு வழிப்போக்கர் விடுதிதானே!'' என்று சொல்லி அவ்வுருவம் அவர் கண்ணெதிரிலிருந்து மறைந்தது. அரண்மனை முழுவதும் தேடியும் அது அகப்படவில்லை.

முன்னை நாளிரவில் நடந்த நிகழ்ச்சியும், அன்று காலையில் நடந்த உரையாடலும் அவர் மனத்தில் பெரிய குழப்பத்தையுண்டாக்கின. தம் பாதத்தின் கீழிருந்த பூமி அடியோடு பறிக்கப் பட்டதுபோல் அவருக்குத் தோன்றியது. தம் முன்னோர்கள் இவ்வுடலை நீத்து இறந்ததுபோல் தாமும் ஒரு காலத்தில் செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியும் அத்துடன் ஒருவித பயமும், அவர் மனத்திற் குடிகொண்டன. நரை, மூப்பு, சாவு என்பன மாந்தர் யாவர்க்கும் இயற்கை யென்றுணர்ந்து அந்த இயற்கைக்கு ஒப்பத் தாமும் சின்னாளில் இவற்றிற்கு ஆளாக வேண்டுமேயெனப் பயந்தார். தாம் இதுவரை நிலையென நினைத்திருந்த யாவும் ஒரு காலத்தில் - அதுவும் குறுகிய காலத்தில் - அழியும் என்ற நினைவு அவர் சிந்தையைக் கலக்கியது! தம்முடைய உடலும் ஒருநாள் மண்ணுக்கிரையாகுமென்ற எண்ணம் அவரைக் கைக்கொண்டது. அந்நாள் பகலும் இரவும் அவர் மனத்துள் சிறிதும் அமைதியும் மகிழ்ச்சியும் இல்லாமல் பெரும் புயலில் அகப்பட்ட சருகுபோல் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

மறுநாள் புலர்ந்தது. இம்மனக் குழப்பங்களினின்றும் தம்மை விடுவித்துக் கொள்ளும் பொருட்டு, தம் நாட்டுச் சீமான்களும் அமைச்சர்களும் சூழ - அரச ஆடம்பரங்களுடன் வேட்டையாடச் சென்றார். கொஞ்ச தூரம் சென்றதும் மற்றவர்களிடமிருந்து பிரிந்து தனிமையாய் ஒரு மிருகத்தைத் துரத்திச் சென்றார். அங்ஙனம் செல்லுகையில், ''ஏ இப்ரஹீம்! நீ இதற்காகவா உலகினில் தோன்றினாய்?'' என்று எவரோ தம்மை நோக்கி வினவுவதுபோல் அவருக்குத் தோன்றியது. உடனே, குதிரையை நிறுத்திச் சுற்றிலும் பார்த்தார். ஆனால், ஒருவரும் அகப்படவில்லை. 'கருணை வள்ளலாகிய இறைவனே

அங்ஙனம் தமக்குத் தம் உண்மை இலட்சியத்தை நினைவூட்டியிருக்கிறன்' என அவர் மனத்தில் தோன்றியது; வாழ்க்கையின் இலட்சியத்தை அக்கணத்தில் உணர்ந்தார். அவர் சிந்தையில் என்று மறியாத மனோதிடமும் உறுதியும் உண்டாயின. இதுகாறும் தம் வாணாளை வீணாளாக்கியதைப் பற்றித் தம்மைத் தாமே நொந்து கொண்டார். இனிமேல் ஒரு கணமும் வீண் செய்யக்கூடாதெனத் தீர்மானித்தார். உடனே தாம் ஏறியிருந்த குதிரையை விட்டிறங்கினர். கொஞ்ச தூரத்தில் நின்று கொண்டிருந்த ஓர் இடையனுக்குத் தம் பட்டாடைகளை அவனுக்குக் கொடுத்து, அவனது எளிய ஆடைகளை வாங்கித் தாம் அணிந்தார். கல்லினுள்ளிருக்கும் தேரைக்கும் கருப்பைக்குள்ளிருக்கும் உயிருக்கும் உணவளிக்கும் கடவுள் தமக்கும் அருள் புரிவாரென உறுதி உடையவராய் வெளியுலகில் புறப்பட்டார்.

அங்ஙனம் வெளிப் போந்து பகவத் சிந்தனையிலும் அடியார்க்கு அடிமை பூணலிலும் பல வருடங்கள் கழித்தார். நபி பெருமான் வாழ்க்கையால் புனிதமாக்கப் பெற்ற மெக்கா மாநகரத்துக்குச் சென்று கபா என்னும் தலத்தைத் தரிசிக்க வேண்டுமென்ற அவா அவர் மனத்தில் உண்டாயிற்று. அவ்விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு அந்நகர் நோக்கிப் புறப்பட்டார். இப் பெரியார் வரும் செய்தி கேட்டு மெக்கா வாசிகள் அனைவரும் அவரைப் போற்றி அழைத்துச் செல்வதற்காக நகர வாயிலில் கூடியிருந்தனர். இப்ரஹீம் அடிகள் அங்குச் சென்றதும், யாவரும் கூட்டமாகக் குழுமியிருப்பதை கண்ணுற்று "இவ்வாடம்பரங்கள் எதற்காக?'' என வினவினர். அதற்கு அவர்கள் ''இப்ரஹீம் அடிகள் என்னும் பெரியார் இங்கு எழுந்தருளப் போகிறர். அவரை வரவேற்க நாங்கள் இங்குக் குழுமியுள்ளோம்'' என்றனர். அதைக் கேட்ட அவர், ''கடையனினும் கடையனை இப்ரஹீமுக்கு இவ்வளவு உபசாரம் எதற்கு?" என்றார். இதைக் கேட்ட அவர்களுக்குக் கோபம் மூண்டது. தாம் போற்றி வந்த பெரியாரை இவர் ஏளனம் செய்கிறரென்னும் தப்பெண்ணங் கொண்டு, அவரை நையப் புடைத்தனர். ''ஏய நன் மாலை வேயினும் அதன்மேல் மன விருப்பெய்தி மகிழவும் வேண்டாம். யாக்கையை ஒருவன் தாக்கி உதைப்பினும் கோபதாபம் கொள்ளவும் வேண்டாம்'' என்ற நன்மொழிக் கிணங்க, அவர் தாம் இன்னரென்றும் தெரிவித்துக் கொள்ளாது, தம்மை இவ்வாறு புடைத்ததைப் பற்றிச் சினமுங் கொள்ளாது வாளாவிருந்தார். அவர்களும் உண்மையைக் கொஞ்ச நேரத்தில் அறிந்து, இப் பெரியார்பால் தாம் அறியாமற் செய்த குற்றத்திற்காக வருந்தி, அவரைப் போற்றி மன்னிப்பும் கேட்டுக் கொண்டனர்.

இப்ரஹீம் நெடுநாளாக மெக்காவிலேயே தவம் செய்து கொண்டிருந்தார். தொண்டர்களுக்குத் தொண்டு செய்வதிலும், பகவானைப் பற்றி ஜபம் செய்வதிலுமே நாள் முழுதும் கழித்து வந்தார். அதிகாலையில் எழுந்து பகவானைப் பிரார்த்தனை செய்து விட்டுக் கூலி வேலை செய்து, அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு, தின்பண்டங்கள் வாங்கிக் கொண்டு வந்து தம்முடன் இருக்கும் பல பக்கீர்களுக்கும் கொடுத்துத் தாமும் உண்பார். அங்ஙனம் உண்ண வருமுன் மாலையில் ஜபத்தை ஆரம்பித்து இரவில் வெகு நேரம் வரை ஈசுவர சிந்தனையிலேயே மூழ்கியிருப்பார். இங்ஙனம் வெகு நேரம் வரை ஈசுவர சிந்தனையில் ஈடுபடுவதிலேயே அவர் காலங் கடத்தி வந்தது. அவருடைய நண்பர்களான சாதுக்கள் சிலருக்குக் கோபத்தை விளைவித்தது. ஆதலால் அவர்கள் அதிருப்தியை உணர்த்தும் பொருட்டு ஒரு நாள் அவர் வருவதற்கு முன்னரே உண்டு உறங்கச் சென்றனர். இப்ரஹீம் அடிகள் வழக்கம் போல் தம் சாதனைகளைச் செய்து விட்டு, இரவில் நேரம் கழித்து வந்தார். யாவரும் உறங்குவதைக் கண்டு, அவர்கள் உணவின்றி உறங்குகின்றனரென நினைத்து வருத்தமுற்று அவர்களுக்கு உணவு தயாரித்தார். அதையறிந்த அவர்கள் வெட்கித் தலைகுனிந்தனர். தங்களிடம் இத்துணை இரக்கத்தோடும், பெருந்தன்மையோடுமிருக்க, தாம் அவரை நோவ வைக்க நினைத்ததற்காகத் தம்மைத் தாமே நொந்து கொண்டனர்.

இப்ரஹீம் அடிகள் தம் நாட்டை விட்டு வந்த பொழுது அவருக்கு ஆண் மகவு ஒன்றிருந்தது. அக்குழந்தை தக்க பருவமடைந்ததும் தன் தந்தையைப் பார்க்கவேண்டுமென்ற எண்ணம் அவன் மனத்தில் உதயமாயிற்று. அவர் மெக்கா மாநகரத்தில் வசித்துக் கொண்டிருக்கிறார் எனக் கேள்வியுற்று, அவ்விளைஞன் அங்கு விரைந்து சென்றனன். அங்கு சென்று விசாரித்ததில், தந்தையார் விறகு வெட்டி அதை விற்று, அதனால் வரும் ஊதியம் கொண்டு மற்றவர்களுக்கும் கொடுத்துத் தாமும் வாழ்ந்து வருகிறாரெனத் தெரியவந்தது. அவர் சென்றிருக்கும் திக்கை விசாரித்துக் கொண்டு இளைஞன் அவரை நாடிச்சென்றான். வழியில் ஒரு கிழவர் தலையில் விறகுச் சுமையொன்றைச் சுமந்து கொண்டு வருவதைப் பார்த்து அவர்தாம் தன் பிதாவென உணர்ந்து வியப்பும் துயரமும் ஒருங்கே அடைந்தான். இக்காட்சி, இளைஞன் கண்களினின்றும் கண்ணீர் ஊற்றெனப் பெருகச் செய்தது. எனினும், வாய்பேசாமல் அவரைத் தொடர்ந்தான். கிழவர் விறகுச் சுமையை விற்றுவந்த காசுகளைக் கொண்டு, கடைக்குச் சென்று உணவுப் பொருள்களை வாங்கி வந்து, அவற்றைச் சமைத்து சாதுக்கள் பலருக்

கும் வழங்கித் தாமும் உண்டு உறங்கச் சென்றதைக் கண்ணுரப் பார்த்துக் கொண்டிருந்தான் மகன். எனினும், தன்னை இன்னுரெனத் தெரிவித்துக்கொள்ள அஞ்சினுன். அங்ஙனம் தெரிவித்தால், தன்னை யொரு பந்தமென நினைத்து எங்ஙனமாவது ஓடி ஒளிந்து கொள்வாரோ என அஞ்சினுன். பிதாவின் எளிய வாழ்வையும், தன்னை இன்னுனென்று தான் தெரிவித்துக் கொள்ள இயலாதிருந்த நிலைமையையும் நினைக்க நினைக்க அவன் துயரம் அதிகரித்தது. இரவு முழுவதும் கண்ணீர் சொரிந்தவனுய்த் துக்கம் ஒருபக்கம், அச்சம் ஒரு பக்கம் தன்னை வாட்ட, உறக்கம் சிறிதுமின்றிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். இவனது துயரத்தைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு பெரியார், அதன் காரணமென்னவென வினவினுர். இளைஞனும் தன் வரலாறு முழுமையும் அப்பெரியாரிடம் அன்பு கூர்ந்து கூற, அடிகள் இருக்கு மிடத்திற்கு அவனைக் கூட்டிக் கொண்டு போனுர் அவர்.

தந்தையை நேருக்கு நேராய்க் கண்ட மாத்திரத்தில் புதல்வன் துயரம் மிகுந்து மதிமயங்கி தந்தை பாதத்தில் விழுந்து விட்டான். சிறிது நேரம் கழித்துச் சுய உணர்ச்சி பெற்று எழுந்தபொழுது ஒருவரை ஒருவரை அளவற்ற அன்புடன் தழுவிக் கொண்டனர். இப்ரஹீம் அடிகள் தம் மகனை நோக்கி ''அப்பா மகனே! நீ ஈஸ்வர நம்பிக்கை யுள்ள ஆஸ்திகனுய்த்தான் இருக்கின்றனையா? நற்புத்தியும் ஞானமும் அளிக்கவல்ல பெரியார்கள் இயற்றிய சாத்திரங்களைப் பயிலுகின் றனையா?'' என்று அருள் நோக்குடன் வினவினுர். யாரே விலக்க வல்லவர் தம் மக்கள் மேல் காதலை? இத்துணை வருடங்கள் கழித்துத் தம் மகனைப் பார்த்தாலும், அவர் முழுமனதும் தாம் பெற்ற புத்திரன் பாற் சென்றது. இருவரும் தம்மை மறந்து கொஞ்சநேரம் உரையாடிக் கொண்டிருந்தனர். எனினும், சிறிது போழ்து சென்றதும் அடிகள் அவனை ஆசீர்வதித்து அவ்விடம் விட்டகல முயன்ருர். தந்தை தன்னை விட்டுச் செல்வதைக் கவனித்த புதல்வன் அவர் கருத்தை உணர்ந்து அவர் பிரிவாற்ருமையைப் பொறுத்துக்கொள்ள மாட்டாமல் 'ஓ' வென்று கதறிக் கண்ணீர் விட்டழுதனன். அவன் அவ்வாறு செய்ததும், அடிகள் தம் கைகளை உயர்த்தி இறைவனைத் தொழுது ''எல்லாம் உன் அடிமையே, எல்லாம் உன் உடைமையே, எல்லாம் உன்னுடைய பொருளே, எங்கணும் நிறைந்தவன் நீ, யாவும் உன்னருள்'' என்று பிரார்த்திக்கவும், அவர் பெற்ற பிள்ளை அங்கேயே சவமாகி விழுந்தனன். இதைத் திகிலுடனும் வியப்புடனும் கவனித் திருந்த அவர் நண்பர்களான மற்ற சாதுக்கள் ''இதன் பொருள் என்ன'' என்று அடிகளைக் கேட்டனர். அவர் அதற்கு உரைத்த மறு

மொழி, அவர்கள் மனத்தில் இன்னும் அதிகமான ஆச்சரியமும், அவர் பால் மட்டற்ற மதிப்பும் உண்டாக்கியது. "என் புதல்வனைக் காணவும் செப்பவொண்ணு அன்புடனும் பற்றுதலுடனும் என் மனது அவன்பாற் சென்றது. உடனே இன்னுமொரு எண்ணமும் என் மனத்தில் தோன்றியது. இங்ஙனம் இவன்பால் இத்தனை பற்றுதல் உண்டானல், எங்ஙனம் ஈசுவரன்பால் எனது முழுமனதும் செலுத்த இயலும், என்ற ஐயம், உண்டாயிற்று. அழிவில்லா பேரின்பக் கடலை விட்டு அழியும் தன்மையுள்ள இப்புழுக்கூட்டின் பேரில் மனத்தைச் செலுத்துவதில் யாது பயன்? என நினைத்து, இப்பந்தங்களினின்றும் விடுவிக்கும் பொருட்டுப் பகவானைப் பணிந்தேன். அவனும் அருள் புரிந்தனன்'' எனப் பகர்ந்தார்.

இவ்வாறு வரையில்லா மன உறுதியுடனும் பகரவொண்ணுப் பகவத் பக்தியுடனும், இப்ரஹீம் அடிகள் சாதனை செய்து வந்தார். அகங்காரங்களை அறவே யொழித்து, உலகப் பற்றுதல்களை முற்றிலும் அகற்றி,ஈஸ்வர சிந்தனையிலேயே நாள்முழுதும் கழித்து வந்தார். "நான் ஒரு நாட்டைக் கொடுத்து ஞானியாகும் தன்மையைப் பெற்றேன். எனது வியாபாரமே யாவரிலும் சிறந்த வியாபாரம்'' எனக் கேட்போருக்குச் சொல்லுவார். இராஜபோகங்களையும் அரச ஆடம்பரங்களையும் மிகுதியாய் அனுபவித்திருந்த அவர் கொஞ்சமேனும் சுகத்தைக் கருதாது தூய்மையுடனும் தாழ்மையுடனும் வாழ்ந்து வந்தார். இத்துணைப் பெரியவர் இங்ஙனம் நாள்தோறும் விறகு சுமந்து கூலி பெற்றுப் பிழைப்பதைக் கண்ட பலர் இவர் வாழ்க்கைக்கெனப் பொருள் அளிக்க முயன்றனர். ஈசுவரன்பால் தமக்கிருக்கும் முழு நம்பிக்கையைக் கெடுக்கச் சாத்தான் செய்யும் சூழ்ச்சிகள் போல் அவை அவர் மனத்திற்குத் தோன்றின. ஆதலால், அங்ஙனம் பொருள் கொடுக்க முன் வந்தவர்களை அவர் மிகவும் கண்டித்தார்.

இத்துணை பக்தியும், சிரத்தையும், மனஉறுதியும், விவேகமும் வகித்திருந்த அவர்க்கு ஈசுவர கிருபையும், ஈசுவர தரிசனமும் கிட்டின வெனச் சொல்லவும் வேண்டுமோ! யாவரும் ஈசுவர சொரூபமெனவும், பகவானுடைய புத்திரர்களெனவும் நினைத்து, யாவர்க்கும் பணியாற்றுதலே தம் முக்கியக் கடமையெனக் கொண்டு தம் வாணுட்களை நடாத்தி வந்தார். அவருடைய இறுதி நாட்கள் கிட்டிய பொழுது, இவ்வூன உடலுக்கு இயற்கையான அல்லல்கள் ஏதுமின்றி இவ்வுலகினின்றும் மறைந்ததாக வரலாறு சொல்கிறது.

# சுவாமி சிவானந்தா

1921-ஆம் ஆண்டு. எனக்கு அப்பொழுது வயது 18. நான் பி. ஏ. முதல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன்; திருவல்லிக்கேணி விக்டோரியா ஹாஸ்டலில் வசித்துக் கொண்டிருந்தேன்.

எனக்கு அப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணர், விவேகானந்த சுவாமிகள் ஆகியோரைப் பற்றி அதிகம் தெரியாது. அவர்களைப் பற்றி என் சகோதரர் ஸ்ரீ டி.எஸ். கந்தசாமி செட்டியார் சொல்லியிருக்கக் கேட்டிருக்கிறேன். விவேகானந்த சுவாமிகள் சிகாகோ சர்வமத சபைக்குச் சென்று இந்துச் சமயத்தை அங்கு நிலைநாட்டியதைப் பற்றி உற்சாகமாக அவர் பேசுவார். அவர்கள் படங்களைப் பார்த்திருக்கின்றேன். அதற்குமேல் எனக்கு அதிகம் தெரியாது.

விக்டோரியா ஹாஸ்டலில் என் அறையில் ஸ்ரீ பி. சின்னு என்ற நண்பர் என்னுடன் இருந்தார். அவர் விவேகானந்த சுவாமி படம் வைத்திருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் ஒன்று மைலாப்பூரில் இருப்பதாகவும், அங்கு ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேர்சீடர்கள் வர இருப்பதாகவும் சொன்னார். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சீடர்களைப் பார்ப்பது என்பது எவ்வளவு பெரிய வாய்ப்பு! அதுவும் விவேகானந்தருடைய சகசீடர்கள் அல்லவா அவர்கள்! எனவே, அவர்களைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று முடிவு செய்தோம்.

போகும் போது அவர்களை எப்படி வணங்குவது, அவர்கள் என்ன சொல்லுவார்கள், அதற்கு என்ன பதில் சொல்ல வேண்டுமென்ற எண்ணங்கள். நாங்கள் கல்லூரியில் பி. ஏ. படிக்கும் மாணவர்கள் அல்லவா? கீழே விழுந்து நமஸ்காரம் செய்வதா? அல்லது நின்று கொண்டே கும்பிடுவதா? ஆனால், அவர்களைப் பார்த்ததும் எங்கள்

மனத்தில் ஒரு ஆழ்ந்த மரியாதை தோன்றிற்று. கீழே விழுந்து தலையாரக் கும்பிட்டு வணங்கினோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் அன்றையத் தலைவரான சுவாமி பிரம்மானந்தாவும், அதன் துணைத்தலைவரான சுவாமி சிவானந்தாவுமே அவ்விரு சீடர்கள். அவர்கள் இருவரும் முதியவர்கள்; அருளாளர்கள்; அனைவரிடமும் ஆழ்ந்த அன்பு கொண்டவர்கள். சுவாமி பிரம்மானந்தர் மிகவும் அமைதியானவர்; அடக்கமுடையவர்; அதிகம் பேசமாட்டார். சிவானந்தா சுவாமிகள் எல்லாருடனும் சரளமாகப் பேசுபவர். எங்கள் பெயர்களையும், படிக்கும் கல்லூரியையும், தங்கியிருக்கும் இடங்களையும் கூறும்படி சுவாமிஜி கேட்டறிந்தார்கள். நாங்கள் விடைபெற்றுக் கொண்டபோது 'மீண்டும் வருக' என்று சொன்னார்கள்.

எனவே, அடுத்த நாள் மாலையும், அதைத் தொடர்ந்து மாலை தோறும் நாங்கள் செல்லத் தொடங்கினோம். சுவாமிகளின் எந்த சக்தி எங்களைக் கவர்ந்ததென்று தெரியவில்லை. சுமார் ஆறுமாத காலம் ஒவ்வொருநாளும் அவர்களைப் பார்ப்பதற்காகவே மடத்திற்குச் சென்றோம். மழைக்காலம் வந்தது. மழையால் நனைந்தும், வெள்ளத்தைக் கடந்தும் செல்ல வேண்டியிருந்தது. நாங்கள் செல்வதை அவை பாதிக்கவில்லை. எங்களைக் கண்டதும் முகமலர்ந்து, வங்காள மொழியில் 'பாலோ' ('நன்றாக இருக்கிறீர்களா') என்று கேட்பார். 'ஆம் மகராஜ்!' என்று பதிலளிப்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி கொண்டோம். எங்களுக்குள் நிகழ்ந்த உரையாடல் இவ்வளவே. ஆனால் இஃதொன்றே எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், மனநிறைவையும் அளித்தது. எனவே ஸ்ரீமகாபுருஷமகராஜிடம் (சுவாமி சிவானந்தரின் சிறப்புப் பெயர்) தொடர்பு சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் — அவரது மறைவு வரை தொடர்ந்திருந்தது.

மறுமுறை, புவனேஸ்வரத்தில் 1923-ஆம் ஆண்டில் மகாபுருஷ மகராஜைச் சந்தித்தபொழுது அவரை மிகநெருக்கமாக அறிய முடிந்தது. அப்பொழுது பி. ஏ. தேர்வு எழுதி முடித்திருந்தேன். விடுமுறைக்கு வீடு செல்வதற்குப் பதிலாக வடக்கே சென்று மகாபுருஷ மகராஜைத் தரிசிக்க விரும்பினேன். அவரது அன்பும், பரிவும், ஆன்மீகச் சிறப்பும் என்னைப் பெரிதும் கவர்ந்திருக்க வேண்டும். எனவேதான் அவர் தங்கியிருந்த புவனேஸ்வரத்திற்குப் புறப்பட்டேன். கல்கத்தாமெயில் புவனேஸ்வரத்தைப் பின்னிரவு 2-மணிக்கு அடைந்தது. புகைவண்டி நிலையத்தில் எனக்காக ஒரு சாது காத்துக் கொண்டிருந்தார். அதிகாலையில் மகாபுருஷமகராஜைத்

தரிசித்தபோது மிக மிக மகிழ்ச்சி அடைந்தேன். என்னுடைய படிப்பு, உடல்நலம் முதலியவை பற்றிக் கேட்டார். அப்பொழுது மிகவும் சிறுவனாக நான் தோற்றமளித்திருக்க வேண்டும். அவருக்கு நான் சிறுபையன் தானே. நீ எப்படித் தனியாக வந்தாய் என்று குழந்தையைத் தாய் கேட்பது போல வியந்து கேட்டார். அவாது அன்பிற்கும், பரிவுக்கும் மிகவும் நான் ஆட்பட்டேன். இங்கு தான் சுவாமிஜி எனக்கு ஆன்மீக போதனையருளிச் செய்தார். இரண்டு நாட்களுக்குப் பின்னர், அருகில் இருந்த புனிதத் தலமாகிய பூரி ஜகன்னாத்திற்குப் போய்வருமாறு பணித்தார். சாது ஒருவரையும் என்னுடன் அனுப்பினார்கள்.

நான் விடைபெற்றுக் கொண்டபோது, 'நான் உனக்கு என்ன தரட்டும்' என்று வினவினார்கள். தன் மேஜையைச் சுற்றிலும் ஒருமுறை பார்த்தார்கள். தங்கத்தில்அமைத்த அழகான பென்சில் ஒன்றிருந்தது. செல்வமிக்க வெளிநாட்டு நண்பர் ஒருவரால் பரிசளிக்கப் பெற்றது அது. அதனை எடுத்து, ''இந்தத் தங்கப் பென்சிலை வைத்து நான் என்ன செய்யப் போகிறேன். நீ எடுத்துக் கொள்!'' என்று கூறி அதைப் பெற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தினார்கள். என் தங்கமோதிரம் ஒன்றை முன்னர் ஒருசமயம் தொலைத்திருக்கிறேன். அன்றுமுதல் விலையுயர்ந்த பொருட்களை நான் வைத்துக் கொள்வதில்லை. எனவே, 'மகராஜ்'! வேண்டாம் ஒரு வேளை இதனையும் தொலைத்து விடலாம். தங்கள் ஆசிகளையே நான் விரும்புகின்றேன்' என்று பதிலளித்தேன். அவரும் சரி என்று கூறி என்னை ஆசீர்வதித்தார்கள். இன்றும் அவரது அருளாசிகள் நிலைத்திருக்கின்றன. வாழ்க்கையின் எல்லாச் சோதனைகளிலிருந்தும் என்னை அவை காத்துக் கொண்டிருக்கின்றன. எத்தனையோ பிரச்சனைகள், சோதனைகள், சிக்கல்கள், எனக்கு வந்திருக்கின்றன. அவற்றை எல்லாம் எதிர்த்து வெற்றி காண எப்பொழுதும் உதவியவை அவர் ஆசிகள்தான்.

புவனேஸ்வரத்தில் மகாபுருஷமகராஜைச் சந்தித்த பின்னர் பெரும்பாலும் ஒவ்வொரு வருடமும் பேலூர் மடத்திற்குச் சென்று ஐந்தாறு வாரங்கள் அவருடன் தங்குவது வழக்கமாயிருந்தது. அதன் பிறகு, குன்னூரிலும், இரண்டு வருடங்கள் கழித்து உதகமண்டலத்திலும் அவரோடு சில மாதங்கள்தங்கியிருக்கவும், அவருக்குச் சேவைசெய்யவும் அரிய சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இந்த இரண்டு இடங்களிலும் மகாபுருஷமகராஜ் பல மாதங்கள் தங்கியிருந்ததால் அவருடன் உலாவச் செல்வதற்கும், உரையாடுவதற்கும், மக்களோடு அவர் எப்படி பழகுகிறார் — பல சூழ்நிலைகளிலும் அவர் எப்படி நடந்து கொள்கிறார் என்பதைச் சமீபத்தில் இருந்து பார்க்கவும், அறியவும்

வாய்ப்புக்கிட்டியது. அவருக்கு உணவு பரிமாறுதல், பாதங்களுக்கு எண்ணெயிட்டு நீவுதல், புகைபிடிக்க வசதி செய்து கொடுத்தல் போன்ற பல்வேறு பணிகளைச் செய்யும் சந்தர்ப்பங்கள்-சாதாரணமாக எவருக்கும் கிடைக்கவொண்ணுதவை-எனக்குக் கிடைத்தன. அவருடன் பழக,பழக அவருடைய ஆன்மீக உயர்வே என் உள்ளத்தைக் கவர்ந்தது.

சுவாமி விவேகானந்தரின் 'சன்னியாசி கீதம்' என்ற பாடல் ஒன்றை மிகுந்த ஆர்வத்துடன் படித்திருக்கின்றேன். உள்ளங்கவரும் அப்பாடல்,

''ஆண்மை கொண்ட பெருந்துறவி !
அமைதி கொள்க அகிலமெல்லாம்;
வேண்டேன் துன்பம் உயிர்க்கெல்லாம்;
விரும்பேன் உயர்வு தாழ்வெல்லாம்.

எங்கும் எதிலும் இருப்பவன் நான்!
இம்மை மறுமை எரிநரகம்,
அங்கோர்மோட்சம், அதில் உறுதி
அச்சம் தளைகள் விட்டுவிட்டேன்.

செத்துப் பிறக்கும் உடல் மீது
செலுத்தும் கவனம் என்ன தரும்?
சித்தம் போல அது நடக்கும்;
செய்த கருமம் வழி நடத்தும்

விருப்பால் புகழ்ந்து போற்றுவதும்
வெறுப்பால் உதைத்துத் தூற்றுவதும்
பொருளாய் எண்ணி மயங்காதே
புகழும், இகழும் பொருட்டல்ல;

புகழ்வோன், புகழப் படுவோனும்
இகழ்வோன் இகழப் படுவோனும்
பகவான் அவனே என அறிக!
பாரில் அமைதி பரப்பிடுக!

என்றே ஓதி உயர்ந்திடுக!
எல்லாம் அவனே உணர்ந்திடுக!
ஒன்றே சொல்க 'ஓம் தத் சத்
ஓம்' என உலகை வென்றிடுக''.

என்று கூறுகின்றது. ஆனல், 'எந்த மனிதனவது தன் மனத்தில் இத்தகைய கருத்துக்கள் முழுவதையும் கொண்டு வாழ்ந்திருப்பானே' என்று ஆச்சரியப்பட்டிருக்கிறேன். ஆனல், நம் சமீபத்திலேயே கண் முன்னரே சுவாமியின் கருத்துக்கள் மனித வடிவம் பெற்று வந்ததென மகாபுருஷமகராஜின் வாழ்வும் அவரது உள்ளொளியும் தென்பட்டன.

குன்னூரில் அவர் தங்கியிருந்த காலத்தில் பிரமுகர் பலர் அவரைத் தரிசிப்பதற்கு வருவது வழக்கம். கொச்சி மகாராஜா ஒரு சமயம் வந்து சாஷ்டாங்கமாக வணக்கம் செய்ததைப் பார்த்திருக்கின்றேன். சென்னை அரசாங்கத்தின் முக்கியத் தலைவர்களும் அவ்வாறே வந்து வணக்கம் செலுத்தினர்கள். அவர்கள் வருகையால் மகாபுருஷமகராஜ் ஒரு சிறிதும் பாதிக்கப்படவோ — தற்பெருமை கொள்ளவோ இல்லை. எப்படி இருக்கிறீர்கள்? நன்ருக இருக்கிறீர்களா? என்று எல்லாரிடமும் எப்படிக் கேட்பாரோ அதே போலவே அவர்களிடமும் அன்புடன் வினவினர்கள். தோட்டக்காரர்களும், பிற வேலையாட்களும் தங்கள் பக்தியைக் காட்டுவதற்கு அவரிடம் வருவார்கள். அவர்களையும் மகாபுருஷமகராஜ் அதே அன்புடனும், பரிவுடனும், மதிப்புடனும்நடத்தி வந்தார். யாவரிடமும் ஒரே விதமான ஆழ்ந்த அன்பு.

ஒரு சமயம், செல்வந்தர் ஒருவர் வியக்கத்தக்க வேலைப்பாடமைந்த, விலையுயர்ந்த கம்பளச்சால்வை ஒன்றை அவரிடம் அன்பளிப்பாகக் கொடுத்தார். அபூர்வமான பரிசு ஒன்று பெறும் சிறுவன் ஒருவனின் மனமகிழ்ச்சியோடு அச்சால்வையைப் பெற்றுக் கொண்டார். அதை விரித்து, 'எத்துணை அழகாகவும், மிருதுவாகவும் இருக்கிறது!' என்று வியந்து பாராட்டினர். அச்செல்வந்தர் மிகுந்த மகிழ்ச்சியுடன் சென்ருர். சிறிது நேரத்தில் ஒரு சிறுமி மகாபுருஷமகாராஜிற்கு வந்தனை செய்வதற்காக வந்தாள். அச்சால்வையை மிக ஆச்சரியத்துடனும், தனக்குக் கிடைக்காதா என்ற ஏக்கத்துடனும் நீண்ட நேரம் பார்த்தாள். குழந்தைகளிடத்தில் ஆழ்ந்த அன்புடையவர் மகாபுருஷமகராஜ்! எனவே சிறுமியை நோக்கி, 'இச்சால்வையை வைத்துக் கொள்ள விரும்புகின்ருயா?' என்று கேட்டார். மிகுந்த ஆவலோடு அவளும் 'ஆம்' என்ருள். அவ்வளவுதான்! சால்வையை விரித்து அளவற்ற ஆனந்தத்துடன் அச்சிறுமிக்குப் போர்த்தி, 'நீயே இதனை வைத்துக்கொள்' என்ருர் மகாபுருஷமகராஜ். சிறுமியும் மகிழ்ச்சியோடு அதனைப் பெற்றுக் கொண்டு துள்ளிக் குதித்து வீட்டிற்கு ஓடினள். அவ்வளவுதான்; அதைப் பற்றி அவர் பின்னர் நினைக்கவில்லை.

மகாபுருஷமகராஜிடம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்துபோய்க் கொண்டிருந்தார்கள். காணிக்கைப் பணம் எவ்வளவோ வரும் — செலவாகும். பொருட்கள் எவ்வளவோ வந்தன — சென்றன. அவர் மட்டும் ஒரே அன்புடனும், அமைதியுடனும், குழந்தையுள்ளத்துடனும் வேண்டுதல், வேண்டாமை இன்றித் திகழ்ந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மார்பளவுப் படம் ஒன்றை என் மேஜை மீது வைத்துக் கொள்ள விரும்பினேன். இதற்கென நல்ல புகைப்பட ஸ்டாண்டு ஒன்று வாங்கினேன். பின்னர் குருமகராஜின் புகைப்படம் ஒன்றை வாங்கி அதனை மார்பளவுக்குவெட்டி அதனுள் பொருத்தினேன். ஸ்டாண்டும், புகைப்படமும் மிகநன்ருகப் பொருந்தியிருந்ததால் பார்க்க அழகாக இருந்தது. 'அது அழகாக இருக்கிறது என்று மகா புருஷமகராஜ் கூறுவார்' என்ற உறுதியான நம்பிக்கையுடன் அவரிடம் எடுத்துச்சென்று காட்டினேன். அதைப் பார்த்ததும் கோபப்பட்ட போது 'இதனை நான் விரும்பவில்லை. குரு மகராஜின் திருவடிகள் காணுத படம் வேண்டாம் நான் விரும்புவதெல்லாம் அவர்தம் தெய்வத் திருவடிகள்தானே' என்ருர். குருமகராஜிடம் அவருக்கிருந்த பக்தியையும், பணிவையும் எவ்வளவு தெளிவாக இந்நிகழ்ச்சி வெளிப்படுத்தியது! பக்தர்களும், அன்பர்களும் மிக அழகான மலர்களையும், பழங்களையும் காணிக்கையாகக் கொண்டு செல்வதுண்டு. அவற்றை எல்லாம் பாராட்டி, 'ஸ்ரீ குருமகராஜுக்கு இவற்றைக் காணிக்கையாக்குங்கள்' என்று கூறுவார். தன்னை முழுமையாக ஆண்டவன் பாதங்களில் அர்ப்பணம் செய்து கொள் வோரின் இயல்பல்லவா இது!

மற்ருெரு சமயம் பேலூர் மடத்திலிருந்து கல்கத்தாவிற்கு அதி காலையில் போக வேண்டியிருந்தது. மகாபுருஷமகராஜிடம் ஆசிகள் பெற்றுக் கொண்டு புறப்பட்டேன், அன்றும் இன்றும் சுத்த சைவ உணவுப் பழக்கமுடையவன் நான். முட்டை கூட அருந்துவதில்லை. தென்னிந்தியாவில் மாமிசம் உட்கொள்ளாததை ஒரு பெருமையாகச் சைவ உணவினர் கருதி வந்தனர்; இதனுல் மாமிச உணவினரைக் காட்டிலும் தாம் மேலானவர் என்ற நினைவு. கல்கத்தா நகருக்குள் சென்றேன். பசி மிகுதியானதால் உணவு விடுதி ஒன்றில் நுழைந்து ரொட்டி வெண்ணெய் கொண்டுவரச் சொன்னேன். சுட்ட ரொட்டி (toast) இரண்டைக் கொண்டுவந்து வைத்தான் பரிமாறுபவன்; அவற்றின் மீது மஞ்சள் நிறத்தில் ஏதோ ஒரு பொருள் வெண்ணெய் போன்று தடவப்பட்டிருந்தது. கட்டணம் செலுத்து மிடத்தில் 'என்ன சாப்பிட்டீர்கள்' என்று கேட்க, 'ரொட்டியும்

வெண்ணெயும்' என்று பதிலளித்தேன். பரிமாறுபவன் இடைமறித்து, 'ஆம்லெட் என்னவாயிற்று?' என்றான். இடி விழுந்தது போல் இருந்தது! எதை உண்ணக் கூடாதென்று நினைத்தேனோ — எதை இதுவரை ஒரு கொள்கையோடு உண்ணாதிருந்து வந்தேனோ அதைச் சாப்பிட்டு விட்டோமே என்று மிகவும் கவலைப்பட்டேன். பின்னர், மடத்திற்கு திரும்பிய பொழுது கல்கத்தாவில் நிகழ்ந்த சம்பவத்தை மகாபுருஷமகராஜிடம் விவரித்தேன். அவரோ என் மீது அனுதாபம் காட்டுவதற்கு மாறாக கைகொட்டி நகைத்து 'நன்று, நன்று உன் அகங்காரம் போய்விட்டது' என்றார். சைவ உணவினனாக இருப்பதே கௌரவம் என்று அகங்காரம் கொண்டிருந்தது எத்துணை அறியாமை என்பது விளங்கிற்று.

மகாபுருஷமகராஜின் பேரன்பே எங்கள் அனைவரையும் அவர்தம் அறிவுரைக்கும், வழிகாட்டுதலுக்கும் ஆட்பட வைத்தது. அவர் அருளிய உள்ளுணர்ச்சியே என்னைத் தொண்டு வாழ்க்கையை மேற்கொள்ள வைத்தது; 'வசதியான செல்வந்தர் வீட்டுக் குழந்தைகட்கு நிகராக ஏழைக்குழந்தைகளும் முன்னுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்' என்ற இலட்சியத்திற்காக ஒரு ஸ்தாபனம் தொடங்க வேண்டும் என்ற எண்ணத்தையும் என் மனத்தில் தோன்ற வைத்தது. உடனே அது பற்றி மகாபுருஷமகராஜுக்கு எழுதினேன். அவரும் 19-11-1929 அன்று எழுதிய தன் பதிலில் பின்வருமாறு கூறினார். ''ஏழைக் குழந்தைகளுக்காக — ஒரு ஸ்தாபனம் தொடங்குதல் மிக நல்ல — மிக உயர்ந்த ஒரு சேவையாகும். ஆனால் அக்குழந்தைகளை நல்ல முறையில் பயிற்றுதல், அவர்களுக்கான வசதி செய்தல் என்ற இரண்டிலும் நிலையான கவனம் தேவை. எனவே, சேவையைத் தொடங்குவதற்கு முன்னர் ஆழ்ந்து சிந்திக்கவும். தன்னலமில்லாமல் உன் சக்தியை அர்ப்பணித்தால் பணம் தானே வந்து சேரும்". அவர் ஆசிகளுடன் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம் என்று தற்பொழுது சிறப்புற்று விளங்கும் கல்வி ஸ்தாபனம் தொடங்கப் பெற்றது. இந்தியாவில் தலையாய கல்வி ஸ்தாபனங்களில் ஒன்றாக வித்யாலயம் இன்று திகழ்வதற்கு அடிப்படைக் காரணம் மகாபுருஷ மகராஜின் ஆசிகளே!

மகாத்மா காந்தியடிகள் சுதந்திர இயக்கத்தைத் தொடங்கிய பொழுது அதில் நான் தவிர்க்க முடியாதவாறு ஈர்க்கப்பட்டேன். ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன், ஒரு சமய நிறுவனம் என்ற முறையில் அரசியலில் பங்கு கொள்ளக் கூடாது என்பதைக் கொள்கையாக வைத்திருந்தது. எனவே, சுதந்திரப் போராட்டத்தில் நான் பங்கு

கொள்ளக் கூடாது என்று மிஷனைச் சேர்ந்த சாதுக்கள் பலர் அறிவுரைகூறி வந்தனர். ஆனால் மகாபுருஷமகராஜ் மட்டும் என் உள்ளுணர்வை நன்கு அறிந்திருந்ததால் என் அரசியல் சேவைக்கு அனுமதி வழங்கி அருளினார். சுதந்திர இயக்கத்தில் சேவை செய்த காலத்திலும் அவர் என்றுமில்லாத அன்பும் பரிவும் என் மீது காட்டி வந்தார். நான் சிறையிலிருந்த சமயம் அவர் பின் வருமாறு எனக்கு எழுதினார், 'மகனே எதற்கும் அஞ்சாதே! இதுவரை எங்களுடன் ஆசிரமத்தில் வாழ்ந்து வந்தாய். இப்பொழுது சிறையில் இருந்தாலென்ன? அங்கும் ஆண்டவனைத் தொழுது வழிபடுவாயாக. என் அன்பும், ஆசிகளும் உன்னுடன் என்றும் நிலைத்திருக்கும். நீ எங்கிருந்தாலும், எந்தச் சூழ்நிலையில் நீ இருக்க நேர்ந்தாலும் ஸ்ரீ குரு மகராஜை மறக்காதே. உலக மாயைகளில் சிக்காதே. அவை என்றும் உன்னைப் பாதிக்காதென்று நான் உறுதியுடன் நம்புகின்றேன். ஸ்ரீ குரு மகராஜ் என்றும் உன்னுடன் இருப்பார். அவரே உன் வழிகாட்டியும், இலட்சியமும் ஆவார்'.

'உள்ளங்களைப் புரிந்து கொள்ளுதலே அன்பு' என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அதன் சரியான விளக்கத்தை மகாபுருஷமகராஜின் வாழ்க்கையிலிருந்துதான் புரிந்து கொண்டேன். தான் நன்மை என்று கருதுவதைக் கூட மற்றவர் மீது கட்டாயப் படுத்த அவர் அன்பு இடம் தரவில்லை. அவ ... பையும்
நன்கு புரிந்து கொண்டு தத்தம் ... தற்குத்
துணைநின்றார். சுதந்திர ... என்
வாழ்க்கையில் பெரியதிருப்ப ... அதன்
இலட்சியங்கள் — அதன் சே ... ஆழ்ந்த
பற்றுதல் இருந்தது. ஆனால் ... ரயிலாக
தேசத்தின் அறைகூவல் வந்த ... தவிர்க்க
இயலவில்லை. மிஷன் பணிக ... ல் நான்
நுழையக் கூடாது என்று மி ... றினர்.
அவ்வாறு கூறுவது எளிது. ... ஈடுபடு
வதற்காக நான் ஸ்ரீ ராமகிரு ... ப விட
வேண்டும் என்ற நிலை ஏற் ... டைந்து
போயிருக்கும். மகாபுருஷம ... ண்பட்ட
கருத்துக்களும் வரவில்லை. எ ... ான நம்
பிக்கைகளையும் அவர் உணர ... டுத்தார்.
எனவே அவர் தம் எண்ண ... வில்லை.

அதற்கு மாறாக 'தியாகம் நிறைந்த வாழ்க்கை எந்தத் துறையிலிருந்தாலும் அது சிறந்ததுதான்' என்று அறிவுறுத்தினார். நான் சிறை செல்வதற்குக்கூட அவர் அனுமதித்தார். ஆனால் 'ஸ்ரீராமகிருஷ்ணர் எந்த இலட்சியங்களுக்காக அவதரித்து வாழ்ந்து வந்தாரோ அவற்றை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்' என்பதைவலியுறுத்தினார். இந்த வார்த்தைகளும், எண்ணங்களும், மன ஒருமைப்பாடுமே எனக்கு மிகப் பெரிய சக்தியை கொடுத்தன. 'இந்நாடு சுதந்திரம் அடைவதற்கு சுவாமி விவேகானந்தர் விட்டுச் சென்ற பணிகளை நிறைவு செய்ய வந்த சத்தியத் தொண்டரே மகாத்மா காந்தியடிகள்' என்று மகாபுருஷ மகராஜ் கருதி, சுதந்திரப் போரில் காந்தியடிகளை நான் பின்பற்றியதை எதிர்க்கவில்லை.

நான் சிறையிலிருந்த காலத்தில் மகாபுருஷமகராஜ் அவர்களுக்கு முடக்குவாதம் உண்டாயிற்று. படுத்த படுக்கையில் இருந்தார். அவரது உடம்பின் ஒரு பகுதியையும், பேச்சையும் அந்நோய் பாதித்திருந்தது விடுதலையடைந்தவுடன் அவரைப் பார்க்க பேலூர் மடத்திற்கு விரைந்தேன். என்னிடம் அவரால் பேச முடியவில்லை. ஆனால், அவர் கண்களில் அதே அன்பையும், பரிவையும் கண்டேன். அவை என்னையே வட்டமிடுவதாகத் தோன்றின. பேச முடியாவிடில் என்ன? அவர் கண்களில் தோன்றிய அன்பின் ஆற்றல் எப்பொழுதும் போன்று என்னைக் கவர்ந்தது, பேச்சுக்கும் அதிகமாக புத்துணர்வூட்டியது. அற்புத ஆன்மீக சக்தியொன்று — உடம்பையும் கடந்த ஆன்மீக ஒளி ஒன்று அவருள் இருப்பது தென்பட்டது. உடம்பின் எந்தக் கஷ்டங்களாலும் அது பாதிக்கப் படவில்லை. எந்தக் குறையையும் அது பொருட்படுத்தவுமில்லை. அவரது ஆன்மீக சக்தி அவர் இயற்கை எய்திய பிறகுங்கூட, அவர் ஆட்கொண்ட எங்களை — என்னை வழி நடத்துகிறது.

உடலும் அதன் நோய்களும் — அதன் அழிவும் கூட ஒரு பொருட்டாக இருக்கவில்லை. கீதையின் பின்வரும் வா
அவர் ஒரு இலக்கியமாகத் திகழ்ந்தார்.

" ஆன்மாவை வாளால் வெட்டவோ—நெருப்பால்
நீரால் நனைக்கவோ—காற்றால் உலர்த்தவோ இ

" எல்லாத் துன்பங்களும், அமைதியில் அழிந்துவி
அமைதியுடைய மனத்தோர்க்கே அறிவு
நிலைத்திருக்கிறது".

## அடியார் பெருமை

நான் ஒரு தத்துவ ஞானியோ, கலைஞனோ அல்லன். ஸ்ரீ ராம கிருஷ்ணரையும், அவர்தம் சீடர்களையும் மற்றவர்கள் எவ்வாறு போற்றுகின்றார்கள் என்பது தெரியாது. ஆனால் எத்தனையோ நூற்றாண்டுகட்கு ஒருமுறை இவ்வுலகிற்கு வழிகாட்டத் தோன்றும் ஆண்டவன் அவதாரமாகவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் இருப்பாரேயானால் அவருடன் வந்தவர்களும் சாதாரண மனிதர்களாக இருந்திருக்க முடியாது. அவர்களும் — ஆன்மீக — அவதாரப் புருஷர்களே, அவர்களுடன் பேசவும், அவர்கள் அன்பிலும், பரிவிலும் பங்கு கொள்ளவும் — அவர்கள் எந்த இலட்சியத்தை நிறைவேற்ற அவதரித்தார்களோ அந்த மாபெரும் பணியில் ஒரு பங்கு பெற்றும் இருந்தவர்கள் உண்மையிலேயே கொடுத்து வைத்தவர்கள். அவர்களைப் போன்ற மகான்களே இந்த நிலத்திற்கு அடிப்படையானவர்கள். அவர்கள் மிக அமைதியாக — எவ்வித ஆடம்பரமோ ஆரவாரமோ இன்றி — உலகில் அவதரிக்கின்றார். இரவுக் காலத்தில், யாருடைய பார்வைக்கும், கேள்விக்கும் புலப்படாது பெய்து எண்ணற்ற பூக்களை மலரவிக்கும் பனித்துளி போன்றவர்கள் அவர்கள்! ஆயிரம் ஆயிரம் மக்களை மலரச் செய்து — அளவற்ற அன்போடும், கருணையோடும், வாழ்வில் மணம் பரப்பச் செய்வதே அவர்களது மாபெரும் பணியாகும்.

INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION FOR WOMEN (DEEMED UNIVERSITY) AVINASHILINGAM CBE.
74824
LIBRARY
L5
D247

ADU LIB
74824